பக்கங்கள்: பத்து

யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2028 கார்த்திகை 22 ஞாயிற்றுக்கிழமை 7-12-1997 UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 9

# படையினர் - புலிகள் மோதல் வன்னியில் தொடர்கின்றது!

## மன்னகுளம் உயிரிழப்புக் குறித்து இன்னும் முழு விவரம் இல்லை

வவுனியா, டிசம்பர் 7

வன்னியில் மன்னகுளம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற பெரும் மோதலின் பின்னர் அங்கு கடந்த இருதினங்களாக அமைதி நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் வன்னியின் ஏனைய பகுதிகளில் இரு தரப்பினருக்கும் இடையில் தொடர்ந்து மோதல்கள் இடம் பெற்றுவருவதாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடும் மழையின் மத்தியிலும் சண்டை நடப்பதாகவும்—

சண்டை நடக்கும் பகுதிகளில் இருந்து பொதுமக்கள் ஏற்கனவே வெளியேறி விட்டதால் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டிருப்பதாகவும் அரச தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

புலிகளின் நிலைகள் மீது படையினர் தொடர்ந்து பீரங்கித் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 111 படையினரின் சடலங்கள் நேற்று படை அதிகாரிகளிடம் ஒப்படைப்பு

### இறந்தோரில் அதிகமானோர் அதிரடிக் கொமாண்டோக்கள்

வவுனியா, டிச. 7

வன்னி, மன்னகுளம் மோதலில் கொல்லப்பட்ட படையினரில் 111 பேரின் சடலங்கள் நேற்று நண்பகல் 11-30 மணிக்கு வவுனியாவில் இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

புலிகள் 133 சடலங்களைக் கைப்பற்றினார்கள் என்றும்— இவற்றில் உருக்குலைந்த 22 சடலங்கள் எரிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

மிகுதி 111 சடலங்களும் நேற்று முன்தினம் மாலை செஞ்சிலுவை சர்வதேசக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன.

இச்சடலங்கள்தான் நேற்று வவுனியாவில் இராணுவ அதிகாரிகளிடம் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவால் ஒப்படைக்கப்பட்டன.

இறந்த படையினரில் அநேகமானவர்கள் உடனடி தாக்குதல்களில் ஈடுபடுத்தப்படுவதற்காக விசேட அதிரடிப் பயிற்சி பெற்ற கொமாண்டோக்கள் என யுத்த முனை தகவல்கள் தெரிவித்தன.

## புலிகள்தரப்பில்இறந்தவரில் அநேகர் குடாநாட்டைச் சேர்ந்தவர்கள்

### பத்துப்பேர்பெண்போராளிகள்

வவுனியா, டிச. 7

கடந்த வியாழக்கிழமை வன்னி, மன்னகுளம் பகுதியில் இடம் பெற்ற மோதலில் தமது தரப்பில் 37 போராளிகள் களப்பலியானதாகவும்—

அவர்களில் 10 பேர் பெண்கள் என்றும் — புலிகளின் குரல், வானொலி நேற்றுத் தெரிவித்தது.

இந்த 37 பேரின் பெயர் விவரங்களும் அறிவிக்கப்பட்டன.

இவர்களில் சுமார் 20 பேர் யாழ். குடாநாட்டைச் சேர்ந்தவர்கள்.

இறந்தவர்கள் 2 மேஜர்கள், 5 கப்டன்கள், 9 லெப்டினன்கள், 6 இரண்டாவது லெப்டினன்கள் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஏ. கே, எல். எம். ஜி. மற்றும் ஜி. பி. எம் ஜி. துப்பாக்கிகள்—167

சினைப்பர்கள் — 4

ஆர். பி. ஜி. — 5

4 எம். பிஸ்டல்கள் — 13

ஷெல்கள் — 36

(10ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்புக்கான விமான சேவை தொடர்ந்து ஸ்தம்பித நிலையில்!

### உடனடியாக ஆரம்பிக்கும் சாத்தியம் இல்லை

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான விமானப் போக்குவரத்துச் சேவைகள் தொடர்ந்து ஸ்தம்பிதநிலையில் இருந்து வருகின்றன.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே விமானப் போக்குவரத்து இடை நிறுத்தப்பட்டுள்ளதாகதெரியவருகின்றது.

வாரம் இருநாள்கள் நடைபெற்று வந்த இந்த விமான சேவை கடந்த மாதம் 10 ஆம் திகதி முல்லைத்தீவு அலம்பில் கடலில் எம். ஐ. 24 ரக ஹெலிக் கொப்டர் புலிகளின் தாக்குதல்களுக்குள்ளான பின்னர் [illegible] நிறுத்தப்பட்டது.

விமான சேவைஇடைநிறுத்தப்பட்டுள்ளதால் அரச வங்கிகளில் நிதி நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து விமானம் மூலம்தான் பணநோட்டுகள் இந்த வங்கிகளுக்கு [illegible]

## படையினர் தாக்குதல்

மட்டக்களப்பு, டிச. 7

அம்பாறை மாவட்டம், திருக்கோவில் விநாயகபுரம் என்னும் இடத்தில் நேற்று முன் தினம் மாலை விடுதலைப் புலி உறுப்பினரொருவர் விசேட அதிரடிப் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் மரணமானார் என்றும் —

இவரது சடலம் நேற்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டுவில்வடக்குசம்பவத்தில் ஒருவர் பலி; ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், டிச. 7

மட்டுவில் வடக்கு, சிவன் கோயிலடியில் நேற்றுக்காலை இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் ஒருவர் கொல்லப்பட்டார். ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுக் காலை பதுங்கியிருந்த படையினர் மீது கிரனேட் வீசப்பட்டதை அடுத்து துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொல்லப்பட்ட 25 வயது மதிக்கத்தக்க ஓர் இளைஞனின் சடலம் சாவகச்சேரி பொலீஸாரினால் யாழ். போதனா வைத்தியசாலையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த 3 பிள்ளைகளின் தந்தையான பரமானந்தம் கார்த்திகேசு (வயது 40) என்பவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதே சமயம் கைதடி வடக்கில் சூட்டுக்கு இலக்காகிக் கொல்லப்பட்ட ஒருவரது சடலமும் யாழ். போதனா வைத்திய சாலையில் பொலீஸாரினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(இ-117-7-9-ரி)

## கொழும்பில் மேலும் 80பேர் கைது

கொழும்பு, டிச. 7

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கைகளில் 80 பேர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்.

கொட்டாஞ்சேனை, மட்டக்குளி, புறக்கோட்டை, முகத்துவாரம் ஆகிய இடங்களில் இத்தேடுதல் இடம் பெற்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே இடம்பெற்ற தேடுதல்களில் நூறுக்கு மேற்பட்டோர் கைதானது தெரிந்ததே. (இ-21)

## வெளிநாட்டுத் தூதுக்குழு புலிகளை சந்திக்க வன்னி வரும்

### கொழும்புப் பத்திரிகை தகவல்

கொழும்பு, டிச. 7

வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அடங்கிய தூதுக்குழு ஒன்று புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதிக்கு வர இருப்பதாக லங்காதீப ஞாயிறு பத்திரிகை தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் நடைபெறும் உள்ளூராட்சிச்சபைகளுக்கான தேர்தலில் பங்கு பற்றுமாறு விடுதலைப் புலிகளைக் கோரும் நோக்கத்துடனேயே இவர்கள் வன்னிக்கு வர இருப்பதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

இந்தக் குழுவினர் வன்னிக்குப் புறப்படுவதற்கு முன்னர் கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையையும் சந்திக்க உள்ளனர் என்றும்-

ஆஸ்திரேலியா உட்பட சில வெளிநாடுகளின் ஆசியுடனேயே தேர்தலில் புலிகளைப் பங்குபற்றச் செய்ய முயற்சி எடுக்கப்படுவதாகவும்- அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ-ஐ)

### மனித உரிமைகள் தின ஆர்ப்பாட்டம்:

## வாசுதேவ உட்பட பல பிரமுகர்கள் பங்குபற்றுவர்

யாழ்ப்பாணம், டிச. 7

வாசுதேவ நாணயக்கார உட்பட பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்ளும் ஆர்ப்பாட்டம் ஒன்று மனித உரிமைகள் தினமான எதிர்வரும் 10 ஆம் திகதி கொழும்பு ரயில்நிலையத்தில் நடைபெற உள்ளது.

வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயகத்திற்கான மக்கள் இயக்கம், சுனந்த தேசப்பிரியாவின் தலைமையிலான ஜனநாயகத்துடனான அமைதிக்கான அமைப்பு, மேர்ஜ் இன் தலைவர் சாள்ஸ் அபயசேகரா, ஜனநாயக உரிமைகளுக்காகப் பாதுகாப்பு அமைப்பில் இருந்து புஞ்சிகெலா, நிமால். பெர்னாண்டோ மற்றும் பல மனித உரிமை அமைப்புக்களும், பெண்ணுரிமை அமைப்புக்களும் இதில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## பாலசுப்பிரமணியம் நிசாந்தன்

காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட பாலசுப்பிரமணியம் நிசாந்தன் 6-12-1997 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் அருளாம்பிகை ஆகியோரின் அன்பு மகனும், நிறைஞ்சன், நிர்மலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பொன்னுத்துரை, பாக்கியம், தில்லையம்பலம் (உரிமையாளர், பிள்ளையார் ஸ்ரோர்ஸ், மல்லாவி—யோகபுரம்), நல்லம்மா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
அ. ஏகாம்பரம்
(பெரியப்பா)

இல 40 டலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(51645)

## பிலுப்பையா மரியம்மா

அச்சுவேலி (அச்சுநகர்)யைச் சேர்ந்த பிலுப்பையா (தம்பு) மரியம்மா 5/12/97 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை பிலுப்பையா (தம்பு)வின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற இம்மானுவேல் (தம்பிராசா) மற்றும் தைரியநாதர் (கனடா), அன்ரனி (மன்னார்), மரியதாசன், மேரி திரேசா, லெனாட் ஜெபராசா, அருட்பிரகாசம், யோசேப் ஜெகநாதன் (U.K.), பிரான்சிஸ் நவநாதன் (U.K.) ஆகியோரின் அன்புத் தாயாரும், எமிலியா, அன்ரன் திரேசாமணி (கனடா), ஜெயம் (ஹொலன்ட்) ரஞ்சினி, இராசநாயகம் (கொழும்பு), வசந்தி, மனோ, கலா (U. K), புஸ்பம் (U. K) ஆகியோரின் அன்பு மாமியாரும், பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகளின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (7-12-97) ஞாயிறு முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு சூசையப்பர் தேவாலயத்தில் இரங்கற்திருப்பலி ஒப்புக்கொக்கப்பட்டு பின்னர் புனித வளனார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பி. லெனாட் ஜெபராசா
(மகன்)

அச்சுவேலி.
(அச்சுநகர்)
[51630]

## சதாசிவம் விசாலாட்சி

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சதாசிவம் விசாலாட்சி 5-12-97 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவத்தின் அன்பு மனைவியும், நாகராசா, இராசம்மா, மகேஸ்வரி, அருளையா, உலகநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகரெத்தினம், நடேசபிள்ளை, சிவஞானேஸ்வரி, விமலாதேவி, பவானிதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 6-12-97 நேற்று பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மணற்காடு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
நாகராசா
(மகன்)

புங்குடுதீவு
3 ஆம் வட்டாரம்.
(51628)

## திருமதி கிறேஸ் செல்வமணி யேசுதாஸன்

கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி கிறேஸ் செல்வமணி யேசுதாஸன் 02-12-1997 இல் கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற அல்பிறட் இராஜசிங்கம் யேசுதாஸன் (முன்னாள் ஆசிரியர், நெல்லியடி ம. ம. வித்தியாலயம்), அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சந்திரவதி குலேந்திரன், ராஜ்குமார் யேசுதாஸன் (ஜேர்மனி), செல்வக்குமார் யேசுதாஸன் (முன்னாள் ஆசிரியர், O. L. R.), றோகினி பாலேந்திரன் (இளைப்பாறிய ஆசிரியை, கொழும்புத்துறை மகா. வித்.), றொக்கிற்றா தேவசகாயம் (யாழ்ப்பாணக் கல்லூரி), றஞ்சிற்றா, அன்ரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், அனுக்கிரகஜோதி குலேந்திரன், வதனா, ஜோதி, பாலேந்திரன், றோகான் தேவசகாயம் (யாழ்ப்பாணக் கல்லூரி), இவாஞ்சோ ஆகியோரின் மாமியாரும், ஜிகான், பிறிசில்லா (பிரான்ஸ்), றோய், கிறிஸ்டி (ஜேர்மனி), பிரியதர்சினி, கிளிங்டன், அன்றா, றொஷானி, டீமா, றொஷேல், றெஜி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை 08-12-97 திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் (புதிய நேரம்) இல.9 சம்பியன் லேன், கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக தாவடி பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
றஞ்சிற்றா யேசுதாஸன்
றொக்கிற்றா தேவசகாயம்
(பிள்ளைகள்)
(5164 3)

## சமய சந்நிதியில்

கொழும்புத்துறை, டிச. 7

யாழ். குடாநாட்டில் உள்ள பெரும்பாலான கிறிஸ்தவ தேவாலயங்களில் நாளை திங்கட்கிழமை புனித கன்னிமரியாள் அமலோற்பவ பெருவிழா நடைபெறவுள்ளது. (ஐ-30)

## மரவள்ளிக்கிழங்கு விலை வீழ்ச்சி

தென்மராட்சி, டிச. 7

தொடர்ந்து பெய்துவரும் மழையை அடுத்து சாவகச்சேரி சந்தையில் மரவள்ளிக் கிழங்கின் விலை பெரும் வீழ்ச்சியடைந்துள்ளது. முன்னர் கிலோ 20 ரூபா வரை விற்கப்பட்ட மரவள்ளிக் கிழங்கு தற்போது கிலோ மூன்று ரூபாவாக விற்கப்படுகிறது.

இதேவேளை வலிகாமம் செம்பாட்டு நிலப்பகுதியில் விளையும் மரவள்ளிக்கிழங்கு கிலோ 13 ரூபாவாக விற்கப்படுவதால் தென்மராட்சிப் பகுதியிலிருந்து வரும் மரவள்ளிக்கிழங்கினைக் கொள்வனவு செய்யும் சில வியாபாரிகள் அவற்றிற்கு செம்பாட்டு மண்ணைப் பூசி அதிக விலைக்கு விற்பனை செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## உடனடியாக சேவையில் ஈடுபடாது

நெடுந்தீவுக்கான சேவையில் அரச படகான குமுதினி உடனடியாக ஈடுபடும் சாத்தியம் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

படகின் அடித்தளத்தில் பொருத்துவதற்குத் தேவையான செப்புத் தகடுகளுக்குப் பதிலாக பித்தளைத் தகடுகள் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளன என்றும்—

செப்புத் தகடுகள் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டு தளவேலைகள் பூர்த்தியாகும் வரை குமுதினி சேவையில் ஈடுபட முடியாது என்று தெரிவிக்கப்படுகிறது (இ-111)

## படையினர் சோதனை

கல்வியங்காடு, கட்டைப்பிராய் பகுதிகளில் உள்ள வீடுகள் நேற்று முன்தினம் இராணுவத்தினரால் சோதனைக்குள்ளாக்கப்பட்டன.

காலை சுமார் 9 மணியளவில் அப்பகுதிகளுக்கு வந்த இராணுவத்தினர் வீடு வீடாகச் சோதனை நடத்தினர்.

இச்சோதனைகளின் போது எவரும் கைதுசெய்யப்படவில்லை எனத் தெரிய வருகின்றது. (இ 9)

## சுகாதார பரிசோதகர் இல்லை

தென்மராட்சியின் தெற்கு, மேற்குப் பிரிவுகளான கைதடி, நாவற்குழிப் பகுதிகளில் உள்ள பத்துக்கு மேற்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய பிரதேசத்துக்கு கடந்த ஆறு வருடகாலமாக நிரந்தர பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நியமிக்கப்படவில்லை.

இதனால் இப்பகுதியில் பெரும் சுகாதார சீர்கேடுகள் இடம்பெறுவதாவும் எனவே இப்பகுதிக்கு நிரந்தரமாக பொதுச் சுகாதாரப் பரிசோதகரை நியமிக்குமாறு இப்பகுதி மக்கள் தென்மராட்சிப் பிரதேச செயலரை மகஜர் மூலம் கேட்டுள்ளனர்.

இது வரை காலமும் இப்பகுதியில் சுகாதார தரிசிப்பாளர் ஒருவரே பணியாற்றியதாக அவர்கள் மகஜரில் குறிப்பிட்டுள்ளனர். (ஐ-117)

## ஐடியல் கல்வி நிலையம்

நீர்வேலி.

**கல்வியாண்டு - 1998**

**ஆண்டு 1 முதல் O/L வரையான புதிய வகுப்புக்கள்**

ஆரம்பம் 10 — 12 — 97 புதன்கிழமை
மாலை 3. 00 மணி.

A/L வகுப்புக்களும் வழமைபோல் நடைபெறுகின்றன.

குறிப்பு:
வழமையான ஆசிரியர் குழுவுடன் புதிய முறையில் ஒழுங்குபடுத்தப்பட்ட வகையில் வகுப்புக்கள் நடைபெறும்.

(51646)

## வாழ்த்துகின்றோம்

புகழ்பூத்த எம் ஸ்கந்தா அன்னையின்

**நிறுவுனர் நினைவுநாளும் பரிசளிப்பு விழாவும்**

இன்று மிகச்சிறப்புடன் நடைபெற வாழ்த்துகின்றோம்.

கல்லூரியின் புதிய அதிபர்

**திருமிகு க. சிவாஜி** அவர்களின் விடாமுயற்சியால் இவ்வாண்டு கல்லூரிபெற்ற வெற்றிகளை வாழ்த்துகின்றோம்.

**உதைபந்தாட்டம்**

17 வயது அணி யாழ். வலயம் 2 இல் இவ்வாண்டு சம்பியன் பெற்றமை.

★ **தமிழ்த்தின விழா - 1997**

**வடக்கு - கிழக்கு மாகாண ரீதியில்**

விவாதம் - முதலாம் இடம்
சிறுகதை - முதலாம்இடம்
பாவோதல் - மூன்றாம் இடம்.

★ **அகில இலங்கை ரீதியிலும்**

விவாதம் - மூன்றாம் இடம்
சிறுகதை - இரண்டாம் இடம்

கல்விப் பெறுபேறுகளும் உன்னத நிலையில் இன்று கல்லூரி பெற்றிருக்கும் உயர்வுகளைப்பாராட்டி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் மன நிறைவாக வாழ்த்துகின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்,**
**யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.**

கந்தரோடை,
சுன்னாகம்.
(51642)

# மரண அறிவித்தல்கள்

## அருளானந்தம் அன்ரன் ஜெயக்குமார் (ஜெயா)

பலாலியில் இருந்து இடம்பெயர்ந்து சென். தோமஸ் லேன், முனை பருத்தித்துறையில் வசிக்கும் அருளானந்தம் லூர்த்தம்மா தம்பதிகளின் புதல்வன் அன்ரன் ஜெயக்குமார் (ஜெயா) 05-12-97 வெள்ளிக்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

இவரது ஆன்ம இளைப்பாற்றுக்காக 06-12-97 சனிக்கிழமை பி. ப. 3.00 மணிக்கு புனித தோமையார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித தோமையார் சேமக்காலையில் இவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
அ.மேரி ஜோசப்
(ராசா)

சென். தோமஸ் லேன்,
முனை,
பருத்தித்துறை.
(சி/2285)

## தம்பு ரிச்சாட் செல்வரத்தினம்

(ஓய்வுபெற்ற கல்வித் திணைக்கள சிறாப்பர்)

அச்செழுவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இருபாலை கோப்பாயை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய T. R. செல்வரத்தினம் 05-12-1997 இல் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

இவர் தவமணி (இளைப்பாறிய ஆசிரியை)யின் அன்புக் கணவரும், செல்வரஞ்சித், தயாளசீலன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நவரத்தினம், சந்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும், புஸ்பமலர், காலஞ்சென்ற ஜெயரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மிச்சேலின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரின் இருபாலை இல்லத்தில் 06-12-1997 மாலை நடைபெற்று பூதவுடல் கோப்பாய் அங்கிலிக்கன் சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
E. D. நவரத்தினம்
(மருமகன்)

வி. எச். லேன்,
இருபாலை,
கோப்பாய் தெற்கு.
(சி/2287)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாட்டிலும் கேரளாவிலும் ரயில்களில் நேற்று குண்டுகள் வெடிப்பு!

## 10 பேர் பலி! 75 பேர் காயம்!!

திருச்சி, டிச. 7

**தமிழ் நாட்டிலும், கேரள மாநிலத்திலும் பயணிகள் ரயில் வண்டிகளில் நேற்றுக் காலை அடுத்தடுத்து இடம்பெற்ற மூன்று குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 10 பயணிகள் பலியாகினர்; சுமார் 75 பேர் காயமடைந்தனர்.**

சென்னையில் இருந்து புறப்பட்ட மூன்று ரயில்களிலேயே இக் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன.

சென்னையில் இருந்து திருச்சிக்குச் சென்று கொண்டிருந்த 'பாண்டியன்' எக்ஸ்பிரஸ் ரயில் திருச்சி ரயில் நிலையத்தில் நேற்று அதிகாலை தரித்து நின்றுவிட்டு மதுரை நோக்கி புறப்பட்டவேளை ரயிலின் தூங்கும் வசதி கொண்ட பெட்டியில் சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. பயணிகள் மூவர் பலியாகினர்; பலர் காயமடைந்தனர்.

இரண்டாவது குண்டுவெடிப்புச் சம்பவம் சென்னையில் இருந்து கோயம்புத்தூர் சென்று கொண்டிருந்த 'சேரன்' எக்ஸ்பிரஸ் ரயிலில் இடம்பெற்றது. இதில் இருவர் உயிரிழந்தனர்; 6 பேர் காயமடைந்தனர்.

சென்னையில் இருந்து ஆலங்குழாய் சென்று கொண்டிருந்த விரைவு ரயிலில் மூன்றாவது குண்டு வெடித்தது. குண்டு வெடித்த சமயம் இந்த ரயில் கேரள மாநிலம் திருச்சூரில் தரித்து நின்றது. இதில் மூவர் பலியாகினர்; பலர் காயமடைந்தனர்.

இக் குண்டு வெடிப்புச் சம்பவங்களை அடுத்து தமிழ் நாட்டில் சகல ரயில் நிலையங்களிலும் விமான நிலையங்களிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது. (ஐ)

### முஸ்லீம் தீவிரவாதிகள் கைவரிசை

தமிழ் நாட்டிலும், கேரளாவிலும் நேற்று ரயில்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள் முஸ்லீம் தீவிரவாதிகளின் கைவரிசை என பொலீஸார் சந்தேகிப்பதாக பி. பி. ஸி தெரிவித்தது.

1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் உத்தரப் பிரதேச மாநிலத்தில் அயோத்தியில் அமைந்திருந்த பாபர் மசூதி இந்துமத அடிப்படை வாதிகளால் இடித்துத் தரை மட்டமாக்கப்பட்டது தெரிந்ததே.

மசூதி இடிக்கப்பட்டு நேற்றுடன் 5 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

இதனை நினைவு கூருமுகமாக முஸ்லீம் அமைப்புக்கள் நேற்றைய தினத்தை கறுப்பு நாளாக அனுஷ்டித்தன.

இந்த சம்பவத்தின் எதிரொலியாகவே நேற்று ரயில்களில்குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது (ஐ)

# ஆஸ்திரேலியாவில் காட்டு தீ கட்டுக்கடங்காமல் எரிகிறது

## மக்கள் வெளியேற்றம்! தீயணைப்பு வீரர் இருவர் பலி!!

சிட்னி, டிச. 7

ஆஸ்திரேலியாவின் சவுத் வேல்ஸ் பிராந்தியத்தில் சிட்னி நகருக்கு வடக்கே காட்டுத் தீ கட்டுக்கடங்காமல் எரிந்து கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தீயை அணைக்க முயன்ற தீயணைப்புப் படையினர் தமது முயற்சியைக் கைவிட்டு அப்பகுதியில் இருந்து மக்களை வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

தீயணைப்புப் படையினருடன் இராணுவத்தினரும் இணைந்து கொண்டுள்ளனர். 6 நீர் விசிறும் ஹெலிக் கொப்ரர்களும் பணியில் ஈடுபட்டுள்ளன.

தீ பரவிய இடங்களில் 30-க்கு மேற்பட்ட வீடுகள் எரிந்து சாம்பராகியுள்ளன. தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த தீயணைப்பு வீரர்கள் இருவர் மூச்சுத்திணறி உயிரிழந்தனர்.

கடும் வரட்சியால் உலர்ந்து போயிருந்த வனப்பகுதியில் மின்னல் தாக்கியதால் இத் தீ பரவியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. (ஐ)

### உசனில் இருந்து எழுதுமட்டுவாள் செல்லும்

# குறுகிய போக்குவரத்து வீதியை திருத்தி அமைக்கக் கோரிக்கை

தென்மராட்சி, டிச. 7

உசன், விடத்தற்பளை மக்களின் போக்குவரத்து வசதிக்காக கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் புதிதாகத் திறக்கப்பட்ட விடத்தற்பளையிலிருந்து கரம்பகம் ஊடாக எழுதுமட்டுவாள் ஆசைப்பிள்ளை ஏற்றம் வரை செல்லும் பாதை கவனிப்பாரற்றுக் காணப்படுவதாக இப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

இப் புதிய வீதியை அமைப்பதற்கு இப்பகுதி மக்கள் தமது காணிகளிலும், வயல் நிலங்களிலும் தேவையான அளவு நிலப்பரப்பினை அன்பளிப்பாக வழங்கியதுடன் அவற்றினைத் திருத்தி பாதையாகவும் பயன்படுத்தி வந்தனர். தற்போது இவ் வீதியில் பாதசாரிகள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் செல்ல முடியாத அளவுக்கு அது சேதமடைந்துள்ளது.

இவ்வீதி திருத்தியமைக்கப்படின் இப்பகுதி விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் இவ்வீதி வழியாக குறுகிய நேரத்தில் கண்டிவீதியை அடைய முடியுமெனவும், விடத்தற்பளைப் பகுதிக்கு வாகன வசதிகள் இன்னும் கிடைக்காததால் இங்குள்ள மக்கள் சுமார் 5 கிலோ மீற்றர் தூரத்தை உசன் ஊடாக மிருசுவில் வரை பல சிரமங்களின் மத்தியில் நடந்தும், சைக்கிளிலும் சென்றுவருவதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளைபுதிதாக திறக்கப்பட்ட ஒரு கிலோ மீற்றர் நீளமுள்ள இப்பாதையைச் செப்பனிட்டுத் தருமாறு இப் பகுதி மக்கள் தென்மராட்சிப் பிரதேச செயலரைக் கேட்டுள்ளனர்.

இவ்வீதி செப்பனிடப்பட்டால் எழுதுமட்டுவாள் ஆசைப்பிள்ளை ஏற்றத்தடியிலிருந்து கரம்பகம், விடத்தற்பளை, கெற்பேலி ஊடாக கிளாலி வரை மக்கள் பயணஞ் செய்யமுடியுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

### வடமராட்சி கிழக்கில் பலத்த மழை

வரணிப் பகுதிகளிலும், வமராட்சி கிழக்குப் பகுதிகளிலும் கடந்த திங்கள் முதல் பரவலாக பலத்த மழை பெய்து வருகின்றது.

வயல்களில் வளர்ந்து வரும் நெற்பயிருக்கு இம் மழையினால் நன்மை ஏற்பட்ட போதும் பிந்தி விதைத்த வயல்களில் உள்ள நெற்பயிர்கள் பாதிப்பை எதிர் நோக்கியுள்ளன என அப் பகுதி விவசாயிகள் தெரிவித்தனர். (ஐ-171)

### தையற் பயிற்சி நிலையம்

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நாரந்தனை மத்தியில் தையற் பயிற்சி நிலையம் ஒன்று நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே எக்ஸ். செல்வநாயகம் நிலையத்தைத் திறந்து வைத்தார். கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நாரந்தனை மத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்தில் இந் நிலையம் திறந்து வைக்கப்பட்டது. (ஐ-111)

### கூடிய புள்ளிகளைப் பெறும்

# ஆண்டு 9, 10 மாணவருக்கு பரிசில்கள் வழங்க ஏற்பாடு

தென்மராட்சி, டிச. 7

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஆண்டு 9, 10 ஆகியவற்றில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி ஆர்வத்தை அதிகரிக்கும் பொருட்டு ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் திட்டம் இந்த வருடம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டு 9, 10 ஆகியவற்றில் கல்விபயிலும் மாணவர்களின் ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சையில் தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களில் அதி கூடிய புள்ளிகள் பெற்ற மாணவர்களின் விடைத்தாள்கள் அந்தந்தப் பாடசாலை அதிபர்களால் கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பப்படும்.

இவ் விடைத்தாள்கள் கோட்டத்தினால் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு ஒவ்வொரு பாடத்திலும் அதி கூடிய புள்ளிகள் பெற்ற முதல் மூன்று மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் கோட்டக் கல்வி அலுவலர் இ. கணேசன் தெரிவித்தார். (ஐ-117)

# அரசின் பதவிக்காலத்தை நீடிக்கத் திட்டமாம்!

கொழும்பு, டிச. 7

தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலம் 2000 ஆம் ஆண்டு முடிவடையவுள்ளது. ஆனால் இந்த ஆட்சிக் காலத்தை மேலும் சில ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக வெளியாகியுள்ள செய்திகள் அரசுக்கு ஆதரவு வழங்கும் இடது சாரிகளையும் மனித உரிமை அமைப்புகளையும் சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளதாக யுக்திய பத்திரிகை தெரிவித்துள்ளது.

புதிய அரசமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது அரசின் ஆட்சிக் காலத்தை நீடிப்பதற்கான மக்கள் அனுமதியையும் மக்கள் கருத்துக் கணிப்பின் மூலம் பெறுவது எனத் திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இது குறித்து அரசாங்கம் இதுவரை எந்தவொரு விளக்கத்தையும் அளிக்கவில்லை—என அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (ஐ-10)

### கடல் அரிப்பைத் தடுக்க

# மறவன்புலோப் பகுதியில் சவுக்கம் கன்று நடுகை

தென்மராட்சி, டிச. 7

தென்மராட்சி தெற்குப் பகுதியான தனங்கிளப்பிலிருந்து மறவன்புலோ, கோவிலாக்கண்டி, நாவற்குழி வரையிலான ஏழு மைல் நீளமான கடலோர எல்லைப்பகுதியில் கடலரிப்பைத் தவிர்க்கும் நோக்குடன் சவுக்குமரக் கன்றுகள் நடப்படவுள்ளன.

முதற்கட்டமாக மறவன்புலோப் பகுதியில் சுமார் இரண்டு மைல் நீளத்திற்கு 2 ஆயிரம் சவுக்குமரக் கன்றுகளை நடுவதற்கு மறவன்புலோ கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் முன்வந்துள்ளதாக சங்கத்தலைவர் மா. லீலா வினோதன் தெரிவித்தார். (ஐ-117)

# சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் ஓட்டினராம்!

## 7பேர் நீதிமன்றத்தில் ஆஜர்

யாழ்ப்பாணம், டிச. 7

சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் ஓட்டிய குற்றச்சாட்டின் பேரில் ஏழுபேர் புதன்கிழமை ஊர்காவற்றுறை அமர்வு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்கள் அனைவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து பதில் நீதிவான் க. கேசவன் அவர்கள் அனைவரையும் அனுமதிப் பத்திரம் எடுக்குமாறு கூறி விடுதலை செய்தார். (இ-9)

# நாகர்கோயில் பகுதிகளில் இரு நாள்கள் தேடுதல்

வரணி, டிச. 7

குடத்தனை, அம்பன், நாகர் கோயில் பகுதிகளில் இரு நாள் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்ட இராணுவத்தினர் கடந்த வெள்ளிக்கிழமை அங்கிருந்து தமது நிலைகளுக்கு திரும்பினர்.

கடந்த புதன்கிழமை ஆரம்பமான இத் தேடுதல் நடவடிக்கையின் போது வல்லிபுரக் கோயில் காவலரண் ஊடாக எவரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

மறுநாள் வியாழக்கிழமை முதல் காவலரண் ஊடாக பொதுமக்கள் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன் நாகர் கோயில் வரையான தட்டிவான் சேவையும் நடைபெற்றது.

ஆனால் படையினர் மறுநாள் வெள்ளிக்கிழமையே தமது தேடுதல் நடவடிக்கையினைப் பூர்த்தி செய்து அங்கிருந்துதிரும்பினர். (ஐ-171)

### பரீட்சை

யாழ்ப்பாணம், டிச. 7

பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகளின் இறுதித் தேர்வு இம்மாதம் 26 ஆம் திகதி ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தேர்வுக்கான ஒழுங்குகள் பரீட்சைத் திணைக்கள அறிவுறுத்தலுக்கு ஏற்ப நடைபெறுகின்றன என்று ஆசிரிய பயிற்சிக் கலாசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

### விவசாய கருத்தரங்கு

சண்டிலிப்பாய், டிச. 7

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் போருட் நிறுவனத்தின் அனுசாரணையுடன் நடத்தும் காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கான கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை முற்பகல் சங்கத் தலைவர் ச. செல்வரத்தினம் தலைமையில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஐ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவர் இடிந்து விழுந்து வாலிபர் மரணம்!

வடமராட்சி, டிச. 7

பழைய கட்டடம் ஒன்றை இடித்துக் கொண்டிருந்த வேளை அக்கட்டடத்தின் சுவர் விழுந்தபோது அதற்குள் நசியுண்டு வாலிபர் ஒருவர் பலியாகினார்.

பலாலியிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை முனையில் வசித்து வந்த அன்ரன் ஜெயக்குமார் (28 வயது) என்பவரே இவ்வாறு பலியானவராவார்.

பருத்தித்துறை முனையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் இச்சம்பவம் நடைபெற்றது. (ஐ-173)

# ஹமில்டன் மீதான வழக்கு 26 ஆம் திகதி விசாரணை

கொழும்பு, டிச. 7

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹமில்டன் வனசிங்கவுக்கு எதிரான வழக்கு விசாரணை இம்மாதம் 26 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதியரசர் ராஜா பெர்னாண்டோ அன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஜெனரல் ஹமில்டன் வனசிங்க 75 இலட்சம் ரூபாவுக்கு அதிகமான பணத்தை எவ்வாறு சம்பாதித்தார் என்பது பற்றி தெரிவிக்க தவறியதனால் அவருக்கு எதிராகவழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. (இ-4)

# தொலைக்கல்வி மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், டிச. 7

கனிஷ்ட பல்கலைக்கழக டிப்ளோமா ஆசிரியர்களுக்கான மூன்று மாதப் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளோர் எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ். இந்துக்கல்லூரியில் இயங்கும் யாழ். தொலைக்கல்வி நிலைய சிரேஷ்ட போதனாசிரியரை சந்திக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ)

# கல்வி வலயத்துக்கு ஓட்டோ

குருநகர், டிச.7

யாழ். வலயம்-1 கல்விப் பணிமனைக்கு ஓட்டோ ஒன்று கொழும்பில் இருந்து 'மஹோா' கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளது.

யாழ். முத்திரைச் சந்தியில் இயங்கி வரும் யாழ். கல்வித் திணைக்கள கட்டடப் பகுதியின் பாவனைக்கு இந்த ஓட்டோ வழங்கப்பட உள்ளது. (ஐ-51)


# நியூ விமாகி



## நத்தார் புதுவருடத்தையிட்டு விசேட மலிவு விலையில்

## அன்பளிப்புப் பொருள்கள், வீட்டுப் பாவனைப் பொருள்கள்

★ செரமிக் பிளேற்ஸ்
★ செரமிக் கறிடிஸ்
★ கப் & சோசர் செரமிக்
★ றைஸ் பிளேற்ஸ்
★ செருமிக் ரீ மக்
★ டினர் செற்
★ கிளாஸ் வகைகள்
★ கிளாஸ் பிளேற்ஸ்
★ கிளாஸ் கறிடிஸ்
★ கப் & சோசர் கிளாஸ்
★ ரீ பொட்
★ கிளாஸ் ரீ மக்
★ ரீ செற்
★ ஷக் வகைகள்

முதலிய பொருள்கள்

அத்துடன்

★ இனாமல் பெயின்ற் வகைகள்
★ காட்போட் சிற் 8' x 4''
★ நிலவிரிப்புக்கள் (பலவர்ணங்களில்)
★ L. சிங் (மாபிள்)
★ S. Steel சிங்
★ Wash Basin
★ S. பைப் 4''
★ மாபிள் வகைகள் 4'' x 4''
★ எமல்சன் பெயின்ற் வகைகள்
★ போலிக்கா சிற் 8' x 4''
★ K. சிங் (மாபிள்)
★ ஸ்கொட்டிங்பான்
★ கொமேட் சிஸ்ரன் tang
★ S பைப் 1½''
★ மாபிள் வகைகள் 6 x 6

ஆகிய பொருள்களையும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்:

## நியூ விமாகி

27/3, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (51462)


## வலிகாமம்தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

# கேள்வி அறிவித்தல்

அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது உள்ளூராட்சி மன்றங்களில் ரூபா 3,00, 000/ இற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கு என்னால் 16-12-97 நண்பகல் 12.00 மணிவரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கிடைக்கப்பெறும் கேள்விகள் அன்றே நண்பகல் 12.30 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் அரக்கு முத்திரையிடப்பட்டு கேள்வியின் பெயர் எழுதப்பட்டு பதிவு அஞ்சல் மூலம் விசேட ஆணையாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் என்ற விலாசத்துக்கு அனுப்பியோ அல்லது அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் இடுவதின் மூலமோ உரிய காலத்திற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும் குறிப்பிட்ட நேரத்திற்குப் பின்னர்கிடைக்கப் பெறும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. உரிய கட்டணங்களைச் செலுத்திகேள்விப் படிவங்களை 15-12-97 நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளலாம்

கிடைக்கப்பெறும் கேள்விகளை முற்றாகவோ அன்றிப் பகுதியாகவோ ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் விசேட ஆணையாளருக்கு உண்டு.

| வேலையின் பெயர் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| 1. அலுவலக தேவைக்குரிய தளபாடங்கள் செய்து விநியோகித்தல் | 500/- | 1,500/- |
| 2. சுன்னாகம் மீன் சந்தையில் அமைந்துள்ள கடைத் தொகுதிகள் திருத்தம் | 150/- | 500/- |

ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விக்காரர் அது பற்றி அறிவித்தல் தரப்படும் திகதியிலிருந்து இருவார காலத்துள் வேலைகளைப் பூரணமாக நிறைவேற்றி ஒப்படைத்தல் வேண்டும்.

ஆ. மகாலிங்கம்,
விசேடஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம், 05-12-97

(இ-2278)

## மக்கள் முகம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீட இசை விரிவுரையாளர் நா. வி. மு. நவரெத்தினம் இசையில் முது மெய்யியல் தத்துவமாணி (M. MuscicPhil.) பட்டத்தைப் பெற்றுள்ளார். இவர் நுண்கலைப்பீட மூத்த இசை விரிவுரையாளராகவும் (18—06—97) முதல் நியமனம் பெற்றுள்ளார்.

இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் கல்வி சார்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் என்ற பதவியையும், இசையில் முதுமெய்யியல் தத்துவமாணி எனும் தகுதியையும் பெறும் முதல் தமிழர் இவர் என்பது குறிப்பிடற்பாலது.

தமிழ் நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கீழைத்தேய இசையில் முதலாம் தர பட்டத்துடன் தஞ்சை திருப்பனந்தாள் ஆதீன கலைக்கல்லூரியின் பண்ணிசைக்கான சிறப்புப் பட்டமும், இலங்கை அரசால் வழங்கப்படும் ஆசிரிய கற்பித்தல் பயில்விற்கான சிறப்புப்பட்டமும் பெற்றுள்ள இவர் இசையின் சிறந்த ஆற்றுகைக்காக (Higher Skills Of Performance) தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் பல விருதுகளைப் பெற்று கடந்த 24 ஆண்டுகளுக்கு முன்னரே ஈழத்திற்குபெருமை தேடித்தந்தவர்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் யாழ். நூலை அடிப்படையாகக் கொண்ட இவரது ஆய்வு தமிழக அறிஞர்களால் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது.

இலங்கை கல்வி கலாசார உயர் கல்வி அமைச்சு இவரின் இசைத்திறமைக்கும் கலைச் சேவைக்குமாக ''ஞான சிரோன்மணி'' என்ற உயர் விருதை 1994 இல் வழங்கிக் கௌரவித்தது. இதே ஆண்டில் இந்திய கலைபயில் பண்பாட்டு (உலக) நிறுவனம் சிறந்த இசைக்கலைஞர்க்கும் இசை ஆய்வாளர்க்குமான உறுப்புரிமையை வழங்கிக் கௌரவித்தது.

வடஇலங்கைச் சங்கீதசபையின் வளர்ச்சியில் கணிசமான பங்களிப்பை வழங்கி அதன் மூத்த உறுப்பினர்களில் ஒருவராக விளங்கும் இவர் யாழ். திருநெறிய தமிழ் இசைச் சங்கத்தின் நிறுவுநரும் தலைவருமாவார்.

★ ★ ★

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும், காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தினைச் சேர்ந்தவரும், மாவட்ட சாரணத் தலைவருமான செல்வன் பரமானந்தம் அஜித்குமார் அண்மையில் இலங்கை ஜனாதிபதிச் சாரணராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 15 ஆம் திகதி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெற்ற காங்கேசன்துறை மாவட்ட பதினேழாவது வருடாந்த சாரணர் பாசறை விழாவின் போது அவருக்கு ஜனாதிபதி விருது வழங்கப்பட்டது. மாவட்ட சாரண ஆணையாளர் ந. சௌந்தரராஜன் ஜனாதிபதி விருதினை வழங்கினார்.

செல்வன் அஜித்குமார் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் சாரணர் குழுவின் தலைவராகவும் பணி புரிந்தவர். இவர் பண்ணாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். (ஆ)

★

# செய்திச் சாரம்

## நோர்வே தூதுவர் யாழ். வருகை

யாழ்ப்பாணம், டிச 7

யாழ். குடாநாட்டின் மீன்பிடித்துறை சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொண்டு ஆவன செய்யும் நோக்குடன் கடந்த செவ்வாய்க்கிழமை நோர்வே தூதுவர் தலைமையின் குழு ஒன்று யாழ். குடாநாட்டை வந்தடைந்தது.

இக் குழு குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்கள் மற்றும் குருநகர் சீநோர் தொழிற்சாலை போன்றவற்றைப் பார்வையிட்டது. [இ-8]

## மிருசுவிலில் துப்பாக்கிச் சூடு! இளைஞர் காயம்

தென்மராட்சி, டிச. 7

கடந்த புதன்கிழமை மாலை மிருசுவில் வடக்குப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த இளைஞர் ஒருவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இதே இடத்தைச் சேர்ந்த சி. சிவனேசன் (வயது 22) என்னும் இளைஞரே தோளில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தவராவார். (இ-117)

## சுகாதாரப்பரிசோதகர் பயிற்சி

குருநகர், டிச. 7

யாழ்.மாநகரசபைப் பகுதியில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு நிலவும் தட்டுப்பாட்டை நீக்கும் நோக்குடன் யாழ். மாநகர சபையில் கடமைபுரியும் உத்தியோகத்தர்கள் ஐவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தற்போது பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டு வருகின்றது.

இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் யாழ். பிராந்திய சுகாதாரப் பணிமனையில் இப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. (ஐ-51)

## பிரிவுபசாரம்

யாழ். செயலக கணக்குக் கிளையில் எழுதுநராகப் பணி புரிந்து தற்போது மருத்துவ ஆய்வுகூடத் தொழில் நுட்பவியலாளர் பயிற்சிக்குத் தெரிவாகிச் சென்ற செல்வி உச்சாயினி, குலசேகரத்திற்கு யாழ். செயலகத்தில் பிரிவுபசார விழா பிரதம எழுதுநர் என். செல்வராசா தலைமையில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம், நிர்வாக உத்தியோகத்தர் க. இராசதுரை, கணக்காளர் செ. நாகராசா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். (ஐ-100)

## தபாற் பெட்டிகளுக்கு வர்ணம்

பருத்தித்துறை அஞ்சலகப் பிரிவிலுள்ள தபாற்பெட்டிகளுக்கு சிவப்பு வர்ணம் பூசப்பட்டு வருகின்றது.

இப் பிரிவிலுள்ள 44 தபாற் பெட்டிகளுக்கு இவ்வாறு வர்ணம் பூசும்பணி ஆரம்பமாகியுள்ளது.

நீண்ட காலமாக வர்ணம் பூசப்படாதிருந்த தபாற் பெட்டிகளுக்கு வர்ணம் பூசுவதற்குரிய நடவடிக்கைகளை பருத்தித்துறை அஞ்சல் அதிபர் இ. அரியரத்தினம் மேற்கொண்டார். (ஐ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இறைச்சிக்கோழி (Broiler) கலப்பட்ஸ், சேவல் என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: No.68, Old Park Road, Jaffna. (51610)

புதிய பஜாஜ் 4S சுப்பியன், புதிய வெஸ்பா ஸ்கூட்டர் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.26, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். [51589]

பொமனேரியன் நாய்கள் இரண்டு விற்பனைக்கு உண்டு. (ஆண், பெண்) தொடர்பு: க. பத்மராஜா இல. 21, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். [51631]

### இறைச்சிக்கோழி

புறொயிலர் மொத்தமாகவும், சில்றறையாகவும் விற்பனைக்குண்டு விலை 1கிலோ கிறாம் 130/-. தொடர்பு: R. S. K. கோழிப்பண்ணை, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். [51283]

இறைச்சிக் கோழி புறொயிலர் (Broiler) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சின்னக்கடைக்கு அருகில்) (51593)

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. இல. 101, பலாலி றோட், (இலுப்பையடிச் சந்தி அருகில்,) யாழ்ப்பாணம். (வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகை உண்டு). [51621]

இறைச்சிக் கோழி (Broilers) விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும் தொடர்பு: 17(5), கோயில் வீதி, யாழ்ப்பாணம். (ஆஸ்பத்திரி வீதிக்கும், பிரதான வீதிக்கும் இடையில்). [51634]

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 141, கோயில்வீதி, யாழ்ப்பாணம். [51633]

### ஆங்கில இலக்கியம்

English Literature Year 9 15 - 12 - 97 தொடக்கம் வகுப்புகள் ஆரம்பம். தொடர்பு: இல. 471, K. K. S. Road, Jaffna (தட்டா தெருவிற்கும், சிவலிங்கப் புளியடிக்கும் இடையில்). [51595]

### மணமகள் தேவை

சுவிற்சர்லாந்தில் பணிபுரியும் யாழ். இந்து கௌரவ குடும்பம் 41 வயது அத்தம் 1 ஆம் பாதம் மணமகனுக்கு குறைந்தது O/L படித்த, 33 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை. Sponsor மூலம் அனுப்பலாம். பிறந்த நேரம் சாதகக்குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: மே/பா 671, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். [51608]

## தேவை

மேனகா அச்சகத்திற்கு கொம்பசிட்டர் தேவை.

நேரில் வரவும். சம்பளம் நேரில் பேசித் தீர்க்கலாம்.

தொடர்பு:-
369, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(51622)

## கண்ணீர் அஞ்சலி

### கதிரவேலு இராசரத்தினம்

எமது பழைய மாணவர் சங்கத்தின் உறுப்பினரும் பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்கத்தவருமான திரு. க. இராசரத்தினம் அவர்கள் இறைபதம்எய்தியமையையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழையமாணவர் பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா/தாவடி இ. த. க. பாடசாலை
(51607)

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை-சுன்னாகம்
### வாகன. மிருக வரி தகடுகள் - 1998 செய்து வழங்குவதற்கான
## கூறுவிலை கோரல்

1998 ஆம் ஆண்டுக்குரிய மேற்படி தகடுகள் செய்து விநியோகிப்பதற்கான கூறுவிலைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி மார்கழி மாதம் (19 . 12 . 97) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 . 00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

விவரம் வருமாறு:-

(1) துவிச்சக்கரவண்டித் தகடு - 3'' நீளம், 1½'' அகலம், 1998 வ. தெ. பி. ச. து. வ. மற்றும் தொடர் இலக்கம் ஆகியன தகட்டில் பதிக்கப்பட்டு (Embose) இருத்தல் வேண்டும்.

(2) மாட்டுவண்டித் தகடு - 4'' நீளம், 3'' அகலம், 1998 வ. தெ. பி. ச. மா. வ. மற்றும் தொடர் இலக்கம் ஆகியன தகட்டில் பதிக்கப்பட்டு (Embose) இருத்தல் வேண்டும்.

(3) தகட்டின் இடதுபக்க மேல் மூலையில் துவாரம் இடப்படல் வேண்டும்.

(4) ஒவ்வொரு தகட்டின் மேற்புறத்திலும் நீலவர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(5) துவிச்சக்கரவண்டித் தகடுகள் 10000 உம் மாட்டு வண்டித் தகடுகள் 200 உம் செய்து விநியோகிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஆ. மகாலிங்கம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்,
1997 . 11 . 03.
(சி/2259)

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மார்கழித்திங்கள் 24 ஆம் நாள் (09 - 12 - 1997) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9. 30 மணி முதல் 10. 30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**பிறின்சிலி - சுகுணேந்திரன்**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**அனிற்றா - சிவகுமாரி**
அவர்களுக்கும்

கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபையில் திருமணம் நிறைவேற இறையருள் கூடியிருப்பதால் அத்தருணம் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்!

திரு. திருமதி
S. அருளானந்தம்
கிழவி தோட்டம்,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

திருமதி
T. பொன்னுத்துரை
கிழவி தோட்டம்,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

(51588)

## COLLEGE OF COMMERCE

நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயில் அருகில்)

புதிய வகுப்புகள்

### ஆண்டு 8 முதல் 11 வரை

ஆரம்பம்:- 10-12-1997 புதன் 3.00 மணி

யாழ். நகரின் தனித்துவமும், திறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினரால்

| | |
|---|---|
| கணிதம் | திரு. கருணாகரன் |
| விஞ்ஞானம் | திரு. தேவா |
| தமிழ் | திரு. கதிர்காமத்தம்பி<br>திரு. தங்கவேல் |
| வரலாறு, சமூகக்கல்வி | திரு. கே. எஸ். முத்துலிங்கம் |
| ஆங்கிலம் | திரு. மகாலிங்கம்<br>திரு. வாகீசர் |
| வர்த்தகம் | திரு. சுபேசன் |
| சமயம் | திரு. ரி. என். தரன் |
| விவசாயம் | பிரபல ஆசிரியர் |

குறிப்பு:

★ கணிதம், விஞ்ஞானம் இப்பாடங்களுக்கு கடந்த 26 வருட வினாக்கள் அலகு ரீதியாக மீட்கப்படும்.

★ பிரிவு ] க்கான அனுமதிகளை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

அதிபர்
C. O. C. JAFFNA
(49863)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 31 | 28 |
| 03 | 11 |
| 1934 | 1987 |



### அமரர் விஸ்வலிங்கம் சிவகுருநாதன்
(நிர்வாக உத்தியோகத்தர்)

திதி: 07 - 12 - 1997

பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் திருவுருவாய்
அன்பு வழிகாட்டி வாழ வைத்த அன்புத் தெய்வமே!
நீ இப் பூவுலகை விட்டு பத்தாண்டுகள் மறைந்தாலும்
உனது நினைவலைகள் என்றும் எமது நெஞ்சை
விட்டு நீங்காது.

உமது பிரிவுத் துயரால் துன்புறும்:
மனைவி, மகன், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
தாய், சகோதரர்கள்.

நுணாவில் கிழக்கு,
கல்வயல் 1 ஆம் ஒழுங்கை,
சாவகச்சேரி
(சி/2279)

## முதலாமாண்டு நினைவஞ்சலி

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 15 | 08 |
| 12 | 11 |
| 1914 | 1996 |



### அமரர்
### கணபதிப்பிள்ளை தெய்வேந்திரம்

திதி: 1997-12-7

ஆறிரண்டு மாதம் சென்றதையா!
ஆறிடுமோ எம் மனது
குடும்பத்தின் குலவிளக்கே - இன்று
கும்பிடும் தெய்வமாகி விட்டீர்
ஆண்டு ஒன்றென்ன எத்தனை
நாள்கள் சென்றாலும்

உங்கள் நினைவுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஓடக்கரை வீதி,
சங்கானை.
(51920)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்
### 1998 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி பற்றிய
# அறிவித்தல்

1998 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி நடப்பாண்டு (1997 ஆம் ஆண்டு) நடைமுறையில் இருந்த அறவீட்டு விகிதமே மாற்றமின்றி நடைமுறையிலிருக்கும்.

1998 ஆம் ஆண்டிற்கான

1 ஆம் காலாண்டு வரி, மார்ச் மாதம் 31-ந் திகதிக்கு முன்னரும்,

2 ஆம் காலாண்டு வரி, யூன் மாதம் 30-ந் திகதிக்கு முன்னரும்,

3 ஆம் காலாண்டு வரி, செப்ரெம்பர் மாதம் 30-ந் திகதிக்கு முன்னரும்,

4 ஆம் காலாண்டு வரி, டிசெம்பர் மாதம் 31-ந் திகதிக்கு முன்னரும் செலுத்தப்படல் வேண்டும்,

விசேட கழிவு

1. 1998 ஆம் ஆண்டின் 4 காலாண்டுகட்குமான தொகையை 31—01—1998-க்கு முன்னர் ஒரே தடவையில் செலுத்துபவர்கட்கு 10 வீத கழிவு வழங்கப்படும்.
2. 1998 ஆம் ஆண்டின் ஒவ்வொரு காலாண்டுகளுக்குமான தொகையை, காலாண்டின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துபவர்கட்கு 5 வீத கழிவு வழங்கப்படும்.

தண்டம்

குறிப்பிட்ட காலாண்டுக்கான வரியை அக்காலாண்டு முடிவடைவதற்கு முன் செலுத்தப்படாதவிடத்து,

1. வெற்றுக் காணிகட்கும், குடியிருப்பு ஆதனங்கட்கும் 15 வீத தண்டமும்,
2. வியாபார நோக்கத்திற்கான ஆதனங்கட்கு 20 வீத தண்டமும் அறவிடப்படும்.

வரி விலக்கும் ஆட்சேபனையும்

சேதமடைந்துள்ள காலியாகவுள்ள ஆதனங்கட்கான வரி விலக்கின் பொருட்டும் விதிக்கப்பட்ட ஆதனவரிக்செதிரான ஆட்சேபனையின் பொருட்டுமான எழுத்து மூல விண்ணப்பங்கள் 31-01-1998-க்கு இடையில் எனக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அண்மைக் காலங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் ஏற்பட்ட இழப்புக்களில் ஓர் அளவையாவது ஈடு செய்து தங்களுக்கு முக்கியமாக சுகாதார வசதி போன்ற அடிப்படை வசதிகளையாவது ஒழுங்காக செய்து தருவதற்கு இவ்வரி நிலுவைகளைச் செலுத்தி எமக்கு பூரண ஆதரவு தருமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பெ. கனகசபாபதி,
செயலாளர்,
நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை. 27—11—1997

(இ/ 2273)

## நடிகர் காலமானார்

பிரபல நடிகரும், சமூக சேவையாளருமான கே.கே. இராசரத்தினம் நேற்று முன்தினம் காலமானார்.

இலங்கை—இந்திய கூட்டுத் தயாரிப்பான பல படங்களில் நடித்த இவர் இலங்கையில் தயாரிக்கப்பட்ட ''நெஞ்சுக்கு நீதி'' என்ற படத்தில் முக்கிய பாத்திரம் ஏற்றிருந்தார். ''பூதத்தம்பி'' தொலைக்காட்சிப் படத்திலும் இவர் நடித்துள்ளார்.

மேடைப்பேச்சாளரும், பட்டிமன்றப் பேச்சாளருமான இவர் தாவடிப்பகுதியில் பல சமூகப்பணிகளில் ஈடுபட்டிருந்தார். (ஐ-3)

## 'வணிகத் தளிர்'

யாழ். திருக்குடும்ப கன்னியர்மட வர்த்தக மாணவர் மன்றத்தின் ''வணிகத் தளிர்'' சஞ்சிகையின் 5 ஆவது இதழ் வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அருட்தந்தை. ஜி. பிலேந்திரன் ஆசியுரை வழங்குவார். பிரதம விருந்தினராக பல்கலைக் கழக வணிகத் துறைத் தலைவர் க.தேவராஜாவும், சிறப்பு விருந்தினராக உதவிக் கல்விப்பணிப்பாளர் வ.க. பாலசுப்பிரமணியமும் கலந்து கொள்வர். சஞ்சிகையைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி. விக்னேஸ்வரன் வெளியிட்டு வைப்பார். சஞ்சிகை அறிமுக உரையை பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இ. இரட்ணம் வழங்குவார். (ஐ)

## முற்றவெளியில் எரிபொருள் நிலையம் திறப்பு

யாழ்.முற்றவெளியில்உள்ள யாழ்.பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனவு நிலையம் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் சங்கத் தலைவர் சீ. வீ. கே.சிவஞானம் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ். பிராந்திய முகாமையாளர் எஸ்.சிவஞானம் விற்பனவு நிலயத்தைத் திறந்து வைத்தார். (ஐ-17)

## ஜே. 202 அ. அட்டை

ஏழாலை தென் மேற்கு (ஜே-202) பிரிவுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிமுதல் புன்னாலைக்கட்டுவன் சிவில் நிர்வாக அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட இருப்பதாக அப்பிரிவு கிராம அலுவலர் அறிவித்துள்ளார். (ஐ)

## எமது அன்பான நன்றிகள்

இணுவில் காயத்ரீபீட தர்மசாஸ்தா குருகுல அதிபர்

### சிவஸ்ரீ நா. மகாதேவக்குருக்கள்

அவர்களது ஷஷ்டி யப்த பூர்த்தி சாந்தி வைபவத்தில் குருபூஜை ஏற்று அனுக்கிரகித்த 'நியாய சிரோன்மணி' பிரம்மஸ்ரீ சி. சுப்ரமண்ய சாஸ்திரிகள் தம்பதிகள், வைபவத்தை குருவாக இருந்து நடத்திவைத்த சிவஸ்ரீ ச. சோமஸ்கந்தக் குருக்கள் மற்றும் சிவாசார்ய பெருமக்கள், மாணவச் செல்வங்கள், வாழ்த்தி கௌரவித்த நியந்ரீ, இந்துக்குருமார் ஒன்றியம், பிராமணசமஜாம், நல்லை ஆதீனமுதல்வர், துர்க்காதுரந்தரி, மங்கள வாத்திய கலைஞர்கள், பூமாலைகள் வழங்கியவர்கள் புகைப்படம், வீடியோப்படம் எடுத்தவர்கள் பத்திரிகையில் வாழ்த்துச் செய்தி, கட்டுரைகள் வழங்கியவர்கள் மற்றும் வைபவத்தில் கலந்து கொண்ட அன்பர்கள், பல்வேறு விதத்திலும் உதவியவர்கள் அனைவருக்கும் எமது அன்பான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்:
மக்கள், மருமக்கள்,
சகோதர. சகோதரிகள்.

(49865)

## ஈசன் கல்வி நிலையம்

கே. கே. எஸ் வீதி, கோண்டாவில்.

### புதிய கல்வி ஆண்டு - 1998

ஆண்டு 4 முதல் O/L வரையான வகுப்புகள்

| | | |
|---|---|---|
| கணிதம் | — திரு. | மோகன், கனேந்திரன் |
| விஞ்ஞானம் | — திரு. | சுதாகரன் |
| தமிழ் | — திரு. | சந்திரசேகர் |
| சமூ— வரலாறும் | — திரு. | பகீர், பிரபா |
| ஆங்கிலம் | — திரு. | ரகுநாதன் |
| வர்த்தகம் | — திரு. | ஸ்ரீ |
| சமயம் | — திரு. | முருகவேள், சுதந்திரன் |

ஆரம்பம்:- 10 - 12 - 1997
புதன் மாலை 3. 00 மணி.

(49866)

## ராகவன் கல்வி நிலையம்

பலாலி வீதி, உரும்பிராய்.

### புதிய கல்வி ஆண்டு - 1998

1ஆம் ஆண்டு முதல் 11ஆம் ஆண்டுகளுக்கான

புதிய பிரிவுகள்

ஆரம்பம்: 10-12-97 புதன் (பி.ப 3.00 மணி)

குறிப்பு:- ★ மாதாந்த பரீட்சைகள்
★ வாரத்தில் 7 கணித வகுப்புக்கள்
★ பயிற்சிப் பரீட்சைகளுடன் புலமைப் பரிசில் வகுப்புக்கள்
★ தமிழ் ஆங்கில துட்டச்க வகுப்புகளும் நடைபெறுகின்றன.

★ A/L 2000 ஆம் ஆண்டுக்கான கலை, வர்த்தக வகுப்புக்கள் விரைவில் ஆரம்பமாக இருக்கின்றன.

மாணவர்களுக்கோர் நற்செய்தி!
கோப்பாய் - மானிப்பாய் வீதியில்
(வைத்தியசாலைக்கருகில்)

### கலைவாணி கல்வி நிலையம்

ஆரம்பம்: 15-12-1997 திங்கள் (பி.ப 3.00மணி)
அனுமதிகள் வழங்கப்படுகின்றன. (51603)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### திருமதி சிவயோகநாயகி இராசரெத்தினம்

(அராலிவடக்கு, செட்டியா மடம், வட்டுக்கோட்டை.)

கடந்த 06-11-97இல் காலமான எனது தாயாரின் இறுதிச்சடங்கில் பங்குபற்றியும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது துயரத்தில் பங்கு கொண்டு உணவு மற்றும் சரீரஉதவிகள் புரிந்தவர்களுக்கும் 16ஆம் நாள் சபிண்டீகரணத்தில் பங்குபற்றி ஆன்ம அமைதிப்பிரார்த்தனையில் பங்கு கொண்டவர்களுக்கும் முக்கியமாக எமது வைத்தியசாலை ஊழியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மகள் உ. ஜெகாதாம்பாள்,
மருமகன் ஏ. உமாகாந்தன்.

நாயன்மார்கட்டு ஆஸ்பத்திரி,
செம்மணி வீதி,
நல்லூர்.

(51584)

# BASF

## யாழ். விவசாயிகளுக்கு ஒரு நற்செய்தி!

# லாவின்

★ மிளகாய் ★ கௌபி ★ போஞ்சி போன்ற பயிர்களில் காய்துளை புழுக்களைக் கட்டுப்படுத்த சிபாரிசு செய்யப்பட்ட கிருமி நாசனி.

பயிர்களுக்கு நன்மை செய்யும் பூச்சி புழுக்களைத் தாக்கும் தன்மை குறைவானது.

புத்தம் புதிய

## பின்கெம் லாவின் பி.எ.எஸ்.எ(F)வ்.

நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

### உழவர் களஞ்சியம்

பலாலி வீதி, திருநெல்வேலி.

### கமக்காரர் மாளிகை

பிரதான வீதி, சுன்னாகம்.

**BASF - Finlay(pvt.) Ltd.,**
186, Vauxhall Street, Colombo- 2

(பீடை கொல்லிகள் அபாயகரமானவை [illegible])
(இ/2246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதை திறக்கப்பட்டால்

# அனுருத்தவுக்கு பிரதமர் பதவி!

கொழும்பு, டிச. 7

'வெற்றி நிச்சயம்' படை நடவடிக்கையில் படைத்தரப்பு வெற்றி பெற்று வவுனியா — கிளிநொச்சி பாதை திறக்கப்பட்டால் அடுத்த சுதந்திர தினத்தன்று ஜெனரல் அனுருத்த ரத்வத்தைக்கு பிரதமர்பதவி வழங்கப்படும்.

இவ்வாறு ஊகங்கள் நிலவுவதாக கொழும்புப் பத்திரிகையாளர் ஒருவர் பி. பி. ஸிக்கு தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டை படைகள் கைப்பற்றிய 'ரிவிரஸ' நடவடிக்கையை அடுத்து அனுருத்தரத்வத்தை கேணல் தரத்திலிருந்து ஜெனரல் அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டார் என்பதை அவர் சுட்டிக் காட்டினார்.

மூப்புக் காரணமாகச் சுகவீனமுற்றிருக்கும் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா விரைவில் பதவி விலகுவார் என ஏற்கனவே கொழும்பில் பரவலாகப் பேசப்படுவது தெரிந்ததே!

# தகவல் தெரியாதிருந்தவர்களில் இருவர் யாழ். வந்தனர்

யாழ்ப்பாணம், டிச. 7

கடந்த ஆண்டு குடாநாட்டில் பல்வேறு இடங்களில் கைதுசெய்யப்பட்டுத் தகவல் தெரியாதிருந்தவர்களின் இருவர் கடந்த புதனன்று திருகோணமலையிலிருந்து வந்த கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த சின்னத்துரைஅசோக் குமார், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பொன்னுச்சாமி சந்திரன் ஆகியோரே இந்த இருவரும் ஆவர்.

இவர்களில் சி. அசோக் குமார் திருமணமானவர். ஒரு பிள்ளையின் தந்தை. இவர் நெல்லியடிச் சந்தியில் வைத்து 11-11-96 இல் கைது செய்யப்பட்டிருந்தார்.

பொ. சந்திரன் ஆனைக் கோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து 13-6-97 இல் கைது செய்யப்பட்டிருந்தார்.

இருவரும் அநுராதபுரத்திலுள்ள தடுப்பு முகாமிலிருந்து முறையே 24-11-97 அன்றும் 12-9-97 அன்றும் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். (இ-7)

## சட்டவிரோத மின்பாவனைக்கு தண்டனை

யாழ்ப்பாணம், டிச. 7

சட்டவிரோதமாக மின்சாரம் எடுத்த குற்றத்தின் பேரில் நல்லூர் வடக்கைச் சேர்ந்த மூவர் கடந்த 3 ஆம் திகதி புதன்கிழமை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் க. கேசவன் முன்னிலையில் வழக்கு எடுக்கப் பட்டபோது மூவரும் தலா ஆயிரம் ரூபாவை நல்லூர் சட்டநாதர் ஆலய பரிபாலன சபையினரிடம் செலுத்தி பற்றுச் சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (உ-8)

## தபால் மூலம் வாக்களிப்புக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், டிச. 7

யாழ். மாவட்டத்தில் நடத்தப்படவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 12-ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். (உ-3)

## சிரமதானம்

நல்லூர் வடக்கு ஐங்கரன் விளையாட்டுக் கழகத்தினர் ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் சூழலில் சிரமதானப் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

பிள்ளையார் கதை ஆரம்பமாக இருப்பதை அடுத்து ஆலய சூழல் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது.

நேற்று ஆரம்பமான இந்த சிரமதானப் பணியில் ஐங்கரன் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். சிரமதானம் தொடர்ந்து இன்றும் நடைபெறும். (ஐ)

## ஆலயத்தில் திருட்டு

கொழும்புத்துறை, டிச. 7

யாழ். ஈச்சமோட்டை அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்திற்குள் கடந்த புதன்கிழமை நள்ளிரவு புகுந்த திருடர்கள் ஆலய அறைக்கதவை உடைத்து புதிய பெற்றோமக்ஸ் விளக்கு ஒன்றையும், ஒரு தொகைப் பணத்தையும் வேறு சில பெறுமதிமிக்க பொருள்களையும் அபகரித்துச் சென்றுள்ளனர்,

இத்திருட்டுச் சம்பந்தமாக பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-30)

## 6 மாகாண சபைகளுக்கு ஒகஸ்டில் தேர்தல்

கொழும்பு, டிச. 7

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தல்களுக்கான ஆயத்த பணிகள் இப்போதே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயகா தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளரின் கருத்துப்படி மேல் மாகாண சபை, வடமத்திய மாகாணசபை, வடமேல் மகாணசபை, ஊவா மாகாணசபை, மத்திய மாகாணசபை, சப்ரகமுவ மாகாணசபை ஆகிய 6 மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் அடுத்த ஆண்டு ஒகஸ்ட் மாதத்திலும், தென் மாகாண சபைக்கான தேர்தல் 1999 ஆம் ஆண்டு நடுப்பகுதியிலும் நடைபெறவுள்ளன. தென் மாகாண சபையின் ஆட்சிக்காலம் 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி முடிவடைகிறது. (ஐ-10)

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில்

## நன்கொடைப் பணம் வழங்க 6 மூத்த கலைஞர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், டிச. 7

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் வறுமைக்கோட்டின் கீழ் வசிக்கும் மூத்த கலைஞர்கள் ஆறுபேருக்கு நன்கொடைப் பணம் வழங்கப்படவுள்ளது.

இதற்கென மூன்று ஓவியக் கலைஞர்களும், தொல்பொருள் சேகரிப்பாளர், நாடகக் கலைஞர், மரபுவழி விளையாட்டுக் கலைஞர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு முதற்கட்டமாக 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளதாக நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவின் கலாசார உத்தியோகத்தர் திருமதி க. விசாகரூபன் தெரிவித்தார். (ஐ-86)

## வன்னியில் குளங்கள் நிரம்பி வழிகின்றன

வவுனியா, டிச. 7

வன்னியில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக குளங்கள் நிரம்பி வழிவதாகத் தெரிவிக்கப்படுகிறது

இதன் காரணமாக குளக்கட்டு மற்றும் வான் பகுதிகளில் வாழும் மக்களை அவ்விடங்களில் இருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் 32 அடி உயர்ந்துள்ளதால் அக்குளத்தில் பெரிய வான் திறக்கப்படவிருப்பதாகவும்-

இதன் காரணமாக அப்பகுதியூடானபோக்குவரத்தை தவிர்த்துக் கொள்ளுமாறும் - கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் பொதுமக்களைக் கேட்டுள்ளனர். (இ-164-3)

# நிறைவான கல்விக்கு ஒருவழிகாட்டி

நூல்: நிறைவான கல்விக்கு...

ஆசிரியர்: திரு. ச. சுப்பிரமணியம்

நூல்வரிசை

கல்வித் துறையினருக்கு, அதாவது ஆசிரியர்களுக்கு மட்டுமன்றி அதிபர்கள் கல்வித் திணைக்களத்தினர் அனைவருக்கும் பயன்படும் வகையில், ''நிறைவான கல்விக்கு'' என்ற நூல் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியரின் அறிவியல் ரீதியிலான அணுகுமுறை பாராட்டத்தக்கது.

நிறைவான கல்வியை வழங்குவதில் பாடசாலைக் கல்வி முறை தற்போது எதிர் கொள்ளும் பிரச்சினைகள் இனம் காணப்பட்டுள்ளன. அவற்றை விடுவிக்கும் வழி வகைகளும் நடைமுறை சார்ந்ததாக, சிறந்த பரீட்சார்த்த அனுபவத்தினூடாக எளிமையான மொழி நடையில் எழுதப்பட்டுள்ளன. கல்விச் செயன் முறையில் ஈடுபடுவோருக்கும், ஆர்வலர் அனைவருக்கும் ஒரு வழிகாட்டியாக இந்நூல் உதவும்.

கல்விக் கொள்கைகள் தொடர்ச்சி உள்ளதாகவும், சமூகத்தின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்றதாகவும் அமையச் செய்ய கல்விக் கொள்கைகளில் விரைவான மாற்றங்கள் நிகழ்கின்றன. அம் மாற்றங்களை உள்வாங்கி கல்வி மேம்பாட்டில் அக்கறை கொண்ட எவரும் சிந்திக்கத்தக்க வகையிலும், நடைமுறைப்படுத்தக் கூடிய வகையிலும் செயல் திட்டங்களாக இந்நூல் கல்வியின் அம்சங்களை விளக்குகின்றது.

கல்வி அபிவிருத்திக்கான காரணிகள், நோக்கங்கள், பாடவிதான அபிவிருத்தி, கல்விப் பெறுபேறு, மதிப்பீடு, முகாமைத்துவ அபிவிருத்தி மேற்பார்வை, ஆசிரியர் தொடர் மதிப்பீடு, மாணவர் தொடர் மதிப்பீடு, புத்தாக்க முயற்சிகள் எனப் பாடசாலை, கோட்ட, வலய, மாகாண தேசிய ரீதியிலான கல்விச் செயன் முறையின் அனைத்து அம்சங்களையும் இந் நூல் கொண்டுள்ளமை சிறப்பம்சமாகவுள்ளது.

கல்வியோடு தொடர்புடைய பெற்றோர், மாணவர்கள், ஆசிரியர், அதிபர், கல்வியலுவலர் கூட தவறான தேர்வு நோக்கில் மாணவர் சமுதாயத்தை வழி நடத்திச் செல்வதனால் மாணவரிடம் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய செயல் திறன், நல்ல மனப்பாங்குகள், மனிதாபிமானம் விடுபட்டுப் போவதனால் இன்றைய மாணவரின் ஆளுமை வளர்ச்சியில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இவர்கள் கல்வியின் நோக்கம், குறிக்கோள்களைப் பூரணமாக அடைய முடியாதவர்களாகி இடை நடுவில் கைவிடப்பட்டவர்களாகவும் உள்ளனர்.

இதனால் சமுதாயமும் நாடும் வளர்ச்சியடைவதற்குப் பதிலாக பின்னோக்கிய நிலையில் சென்று கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. கல்வியறிவினால் விடுவிக்கக் கூடிய பல பிரச்சினைகள் விடுவிக்கப்படாமலேயே தொடர்ந்து கொண்டு வருவதை நீக்க வேண்டும். அதற்கு கல்விச் சமூகத்தினர் ஒதுங்கி நில்லாது தம்மை அர்ப்பணித்துச் செயலாற்ற வேண்டும் என்ற அவாவுடன் நூலாசிரியர் பல ஆக்கபூர்வமான கருத்துக்களை முன் வைத்துள்ளார். அவரது கல்வித்துறை சார்ந்த அனுபவமும், அர்ப்பணிப்புச் சேவையும், ஆழ்ந்த அறிவும் நூலில் மிளிர்கின்றது.

எதிர் வரும் ஆண்டில் ஆண்டு 6 இற்கு மேல் மாணவர் தொடர் மதிப்பீட்டு செயல்திட்டம்நாடுமுழுவதும் செயற்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் மாணவரின் செயல் ஈடுபாடு அதிகரிப்பதும் தம்மைத் தாமே சுயமதிப்பீடு செய்து தம்மை ஒழுங்குபடுத்திக் கொள்ளவும் ஆசிரியரானவர் தமது கற்பித்தலைக் கல்விக் குறிக்கோள்களுக்கு அமையச் சீராக்கிக் கொள்ளவும் இத்திட்டம் உதவுவதுடன் இறுதியாக மாணவனின் திறன், ஆர்வம் என்பவற்றிற்கு ஏற்ப உயர் கல்வியை அல்லது தொழிற்கல்வியை, தொழிலைப் பெற பெரிதும் உதவும் என நூலில் விளக்கப்பட்டு, மாதாந்தம் நிரப்பக்கூடிய மாணவர் தொடர் மதிப்பீட்டுப் படிவமும், புள்ளியிடும் திட்டமும் உதாரணம் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

கல்வியின் நடைமுறைப்படுத்தல் தொடர்பான களநிலைப் பிரச்சினைகள் அதற்கான தீர்வுகள், புதிய திட்டங்கள், ஆலோசனைகள் அடங்கிய சீர்திருத்த ஆலோசனை விளக்கமாக இந்த நூல் ஒரு புதிய பாதைக்கு வழிகாட்டி நிற்கின்றது. அழகான கணனி அச்சுப்பதிப்புடன் வெளியாகியுள்ள ''நிறைவான கல்விக்கு...'' என்ற நூல் இன்றைய காலத்திற்கும், கல்விசார் சமூகத்தினருக்கும் பெரிதும் உதவும் ஒரு வழிகாட்டியாக உள்ளது. ★

பா. தனபாலன்

## பருத்தித்துறையில் 'சஜிந்தா' கப்பல்

வடமராட்சி. டிச. 7

பல்வேறு அத்தியாவசியப் பொருள்களுடன் 'சஜிந்தா' கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்ததும் இக்கப்பலிலிருந்து கடந்த இரு தினங்களாக உருளைக்கிழங்கும், கூரைத் தகரங்களும் இறக்கப்பட்டு வருகின்றன. (ஐ-173)

## மின் இணைப்பு கிடைக்கவில்லை

கொழும்புத்துறை, டிச. 7

கொழும்புத்துறை கிழக்கு அருள்மிகு ஸ்ரீ முத்து மாரி அம்மன் ஆலயத்திற்கும், அப்பகுதியில் உள்ள வீடுகளுக்கும் மின் இணைப்பு இது வரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலய நிர்வாகிகள் உட்பட இப் பகுதி வீட்டு உரிமையாளர்கள் பலமுறை யாழ். மாவட்ட மின் பொறியியலாளர் அலுவலகத்துடன் நேரிலும், கடித மூலமும் தொடர்பு கொண்ட போதிலும் இதுகால வரை மின் இணைப்பு கிடைக்க வில்லை. (ஐ-30)

## நிறுவுநர் நினைவு நாள்

யாழ்ப்பாணம், டிச. 7

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு நாளும், பரிசளிப்பு விழாவும் இன்று காலை 9.00 மணிக்கு அதிபர் க. சிவாஜி தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான பீடாதிபதி வி.கே கணேசலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆசியுரையையும், உடுவில் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் நிறுவுனர் நினைவுப் பேருரையையும் வழங்குவார்கள். (ஐ-8)

## கோழிகள் திருட்டு

யாழ்ப்பாணம், டிச. 7

கொக்குவில் பகுதியில் கோழித் திருடர்களின் தொல்லை நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக கோழி வளர்ப்போர் பலரும் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

இரவில் வீட்டுச் சொந்தக்காரர் உறக்கத்தில் இருக்கும் சந்தர்ப்பத்தில் மழைபெய்யும் இரைச்சலை தமக்குச் சாதகமாகப் பயன் படுத்தி கோழித் திருடர்கள் தமது காரியத்தை இலகுவாக முடித்துக்கொள்வதாகத்தெரிவிக்கப்படுகிறது.

கொக்குவில் பிரம்படி, தலையாழிப் பகுதிகளில் கடந்த சில நாள்களில் தொடராக கோழித் திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. (ஐ-4)

## விளையாட்டு உபகரணங்கள்

நெடுந்தீவு, டிச. 7

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கென 'யுனிசெவ்' நிறுவனத்தால் வழங்கப்பட்ட விளையாட்டு உபகரணங்களை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன் நெடுந்தீவு மகாவித்தியாலயம் றோ.க. மகளிர்வித்தியாலயம், மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலை ஆகியவற்றிற்கு வழங்கினார். (ஐ-111)

## சிறுமியை பாம்பு தீண்டியது

தென்மராட்சி, டிச. 7

வீதியில் மழை வெள்ளம் தேங்கி நின்றதால் வீதி ஓரமாக நடந்து சென்ற பாடசாலை மாணவியை பற்றை மறைவில் கிடந்த பாம்பு கடித்த சம்பவம் மிருசுவில் உசன் பகுதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த அ. சசிரேகா (வயது 8) என்னும் மாணவியே பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். நகரிலே! கொழும்பு விலையில்
அடையாள அட்டை கவரிடுதல்
(LAMINATION)

அடையாள அட்டைமுதல் சகல ஆவணங்களும்
கொழும்பு விலைக்கே கவரிட்டுப்
பெற்றுக் கொள்ளலாம்.

★ தரமான போட்டோ ஸ்ரற் பிரதிகளுக்கும்

சன்லைற் றைக்கிளினேர்ஸ்
யாழ்ப்பாணம்.

கிளை;
சன்லைற் மல்ரி சேவிஸ்
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.

(51639)

# குவைத்தில் பணிபுரிந்தோருக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவில் மோசடி

கொழும்பு, டிச. 7

1994இல் குவைத் நாட்டை ஈராக் ஆக்கிரமித்ததை அடுத்து தொழில் வாய்ப்புகளை இழந்த சுமார் 25 ஆயிரம் இலங்கையர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கு என ஐ.நா வின் நட்டஈட்டு ஆணைக்குழு சுமார் 600 கோடி ரூபாவை வழங்கியிருந்தது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணிமனையால் இந்த நிதி பல மாதங்களாக இலங்கை வங்கியில் வைப்பிலிடப்பட்டு இருந்தது. வைப்புப் பணத்திற்குக் கிடைத்த வட்டி வேலை இழந்தோருக்கு வழங்கப்பட்ட நட்டஈட்டுடன் சேர்த்து வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இந்த வட்டிப் பணம் அவ்வாறு வழங்கப்படாமல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகளின் வெளிநாட்டுப் பயணங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் தொடர்பான நிர்வாகச் செலவுகளுக்காகவே இந்த வட்டிப் பணம் பயன்படுத்தப்படுகிறது என அப்பணிமனையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார். ஆனால் அந்த அதிகாரியின் விளக்கம் ஏற்புடையதல்ல எனத் தெரியவந்துள்ளதாக 'யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

நட்டஈட்டை வழங்கும் நிர்வாகச் செலவுக்கென ஐ.நா. வின் நட்டஈட்டு ஆணைக்குழு தனியாக 9 கோடி ரூபாவை வழங்கியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-10)

கண்ணீர் அஞ்சலி

தாதியர் பாடசாலை மாணவி
செல்வி இராஜகுலசிங்கம் ரஜனி
அவர்களின் தாய் தந்தையரான
திரு. திருமதி இராஜகுலசிங்கம்

ஆகியோரது திடீர் மறைவையிட்டு அவர்களின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அதிபர், போதனாசிரியர்கள்,
மாணவ, மாணவிகள், ஊழியர்கள்,
தாதியர் பாடசாலை, யாழ்ப்பாணம்.

(51636)

SPOKEN ENGLISH
with
GRAMMAR
BY:
BRITTO

ஆரம்பம்:-
09 - 12 - 1997
செவ்வாய் 12- 00மணி

இடம்:-
புகையிரத நிலைய வீதி,
மல்லாகம்.
(சந்திக்கு அருகில்)

(49867)

## ஜி. சீ. ஈ. சாதாரண தர விண்ணப்பம்:

# தொழில் நுட்ப பாட இலக்கங்களில் தவறு

வலிகாமம், டிச. 7

இவ்வருடம் நடைபெற உள்ள ஜி சீ,ஈ (சா.த)பரீட்சைக்கு விண்ணப்பம் அனுப்பும்போது தொழில்நுட்பப் பாடஎண் சம்பந்தமாக பாடசாலை அதிபர்களால் விடப்பட்ட தவறை சீர் செய்ய பரீட்சை ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேற்படி பரீட்சையின் தொழில்நுட்பப் பாடங்களில் இவ்வருடம் முதல் புதிய பாடத் திட்டத்துக்கமையவே பரீட்சை நடைபெறும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் பல பாடசாலைகள் பழையபாடத்துக்குரியஎண்களை குறிப்பிட்டே விண்ணப்பித்திருந்தன.

பரீட்சையில் மாணவர்கள் பாதிக்கப்படாதிருப்பதற்காக மேற்படிதவறினை சீர்செய்து கொள்ள பரீட்சை ஆணையாளர் வசதி செய்துகொடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் பாடசாலை அதிபர்களுக்கு பின்வருமாறு அறிவுறுத்தியுள்ளார்.

மேற்படி பரீட்சையில் புதிய தொழில்நுட்பப்பாடங்கள் சம்பந்தமாக பாடசாலை பரீட்சார்த்திகளின் பாட எண்கள் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புதிய தொழில்நுட்பப் பாடங்களில் மாற்றங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் பரீட்சை மேற்பார்வையாளரிடம் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை கொடுக்க வேண்டும். தோட்டப் பராமரிப்பு (79) விலங்குபராமரிப்பு(80) உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பம் (89) ஆகியவை தவிர்ந்த ஏனைய தொழிநுட்பப் பாடங்களில் இவ்வாறு மாற்றம் செய்து கொள்ள முடியும். இது தொடர்பான விவரங்களை பரீட்சை மேற்பார்வையாளரிடம் எழுத்து மூலம் அறிவித்து அதன் பிரதியை தமக்கு அனுப்பிவைக்குமாறும் பரீட்சை ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார்.

பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்களுக்கும், பாடசாலை அதிபர்களின் கோரிக்கையை ஏற்று பரீட்சார்த்திகளை பரீட்சை எழுத அனுமதிக்குமாறும், குறிப்பிட்ட 79, 80, 89 பாடங்களுக்கு மாற்றம் செய்வதாயின் தமது எழுத்துமூலமான அனுமதியை பெறவேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-152)

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை - சுன்னாகம்
# 1998 ஆம் ஆண்டிற்கான
# மீள் கேள்வி அறிவித்தல்

09 - 11 - 97 ஆந் திகதிய "உதயன்" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நியந்தனைகளுக்கும் மேலதிகமாகக் கீழ்க் குறிப்பிடப்படும் நியந்தனைகளுக்கும் அமைய பின்வரும் இறைச்சிக் கடைகள், கடைகள் ஆகியவற்றின் குத்தகைக்கான கேள்விகள் 01 - 01 - 98 தொடக்கம் 31 - 12 - 98 வரையுள்ள காலப்பகுதிக்கு மீளவும் கோரப்படுகின்றன.

| | கேள்விப்பத் திரப்பணம் | கேள்விவைப் புப்பணம் | மாத வாடகை | ஆகக்குறைந்த மதிப்பீட்டுத்தொகை |
|---|---|---|---|---|
| 1) சுன்னாகம் உப அலுவலகம் மீன்சந்தையில் அமைந்துள்ளவை:- | | | | |
| 1. சுன்னாகம் மாட்டிறைச்சிக்கடை | 100/- | 2,000/- | 100/- | 1,50,000/- |
| 2. சுன்னாகம் ஆட்டிறைச்சிக்கடை | 100/- | 1,000/- | 100/- | 50,000/- |
| 3. கருவாட்டுக்கடை இல. 4 | 50/- | 100/- | 60/- | 7,200/- |
| ,, ,, இல. 6 | 50/- | 100/- | 60/- | 2,500/- |
| ,, ,, இல. 7 | 50/- | 100/- | 60/- | 2,500/- |
| 2) உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1. இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 100/- | 500/- | — | 80,000/- |
| 2. தாவடி தெற்கு மாட்டிறைச்சிக்கடை | 100/- | 500/- | — | 55,000/- |
| 3) ஏழாலை உப அலுவலகம் ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக்கடை | 50/- | 500/- | — | 75,000/- |
| | கேள்விப்பத் திரப்பணம் | கேள்விவைப் புப்பணம் | மாத வாடகை | ஆகக்குறைந்த மதிப்பீட்டுத்தொகை |
| 4. இழுபொறி யந்திரம் (டிராக்டர்)பெட்டியுடன் வாடகைக்கு அமர்த்துதல் 01 - 01 - 98 தொடக்கம் 31 - 12 - 98 வரையான காலப்பகுதிக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட குப்பைகூழங்களை அகற்றுவதற்கு இழுபொறியந்திரம் வாடகைக்கு அமர்த்துதல் | 100/- | 500/- | — | — |

கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் இறுதித்திகதி 15 - 12 - 97 நண்பகல் 12-00 மணி வரை

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி:- 16 - 12 - 97 மு ப. 10-00 மணி வரை

கேள்விகள் திறக்கப்படும் திகதி - 16 - 12 - 97 மு. ப. 10-30 மணிக்கு

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்,
1997 - 12 - 03

(ஐ-2960)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ வளர்ச்சிக்காக அயராது உழைப்பவர்

பன்னாலையில் பிறந்து, பல ஆயிரம் மாணவர்களின் நல்லாசிரியரனாகத் தெல்லிப்பழை மகாஜனாவில் ஒளிவிட்டுப் பிரகாசித்த விநாயகரத்தினத்தை அறியாதவர்கள் இல்லை. கீரிமலைச் சிவநெறிக் கழகத்தில் ஸ்தாபகராக இருந்து சைவத் தமிழ்ப் பணி ஆற்றி பெருந்தொண்டு செய்த பெருமகன் இவர்.

நாற்பது வருட ஆசிரிய சேவையில் இருந்து அண்மையில் ஒய்வு பெற்ற இவர் ஆசிரியர் வாழ்வில் சாதித்தவை ஏராளம். ஆடம்பரமற்ற அமைதியானவாழ்வு வாழ்ந்த இவர், மகாஜனாக் கல்லூரி கலைத்துறையில் பல தங்கப் பதக்கங்களை காலத்திற்குக் காலம் தட்டிக் கொள்வதற்குக் காரணராக இருந்தவர்.

சிவராத்திரி பெருநாளில் கீரிமலை விழாக்கோலம் கொள்வது வழமை. அவ்வேளை தொண்டனாக, விழா அமைப்பாளனாக, சிவநெறிக் கழகத்தினூடாக அலங்கரிப்பவர் இவர். நீண்ட காலமாக யாழ். மாவட்டத்தில் நடைபெறும் சைவசமய பாடக் கருத்தரங்குகளுக்குமுதன்மை ஆசிரியராகப் பணியாற்றி பாடங்களைத் தெளிவுபடுத்துபவர் இவர்.

மாணவர்களுக்குப் பேச்சுப் பயிற்சி அளிப்பதில் தன்னலங்கருதாப் பணியாற்றிய ஆசிரியவர்கள் உருவாக்கிய பலர் இன்று சிறந்த நாவன்மையாளர்களாக இந்நாட்டில் திகழ்கிறார்கள்

யாழ். மாவட்டத்தில் குறிப்பாக 35வருடங்களாக நாவன்மைப் போட்டிகளுக்கு நடுவராகப் பணியாற்றுகின்ற பெருந் தகுதியினை சைவ பரிபாலன சபை, விவேகானந்தசபை போன்ற நிறுவனங்கள் இவருக்கு வழங்கியிருந்தது.

திருக்குறள், திருமுறைகள் ஒளவையின் அறநூல்கள், அவரது கூடை பூட்டியசைக்கிளில் யாழ்ப்பாணம் முழுவதும் அவரோடு உலாவும். அது ஒரு காலம்.

கீரிமலையில் எப்போது மீண்டும் சிவநெறிகழக பணிகள்? என்ற பலரது வினாவுக்கு மேலேகையை உயர்த்தி அவனுக்குத் தான் தெரியும் என்று அமைதியாகப் பதிலளித்து ஒதுங்குவார் ஆசிரியப் பெருந்தகை ஆற்றிய பணிகளை சைவ உலகம் மறக்காது. மகாஜனாக் கல்லூரியின் இரத்தினங்களில் ஒன்றாகிய இப் பெருந்தகையை நன்றிக் கடன் மிக்கசமுதாயம் இன்று போற்றி மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் விழா எடுத்து கௌரவிக்கிறது.

— சு. ஏழூர்நாயகம்

# உதயன்

## யாழ்ப்பாணக் கல்விநிலை

போரின் காரணமாக யாழ்ப்பாணத்தின் கல்வி நிலைமை பாதிக்கப்படவில்லை. யாழ்ப்பாணம் தொடர்ந்தும் கல்வியில் முன்னணியில் திற இறது.

இவ்வாறு தமது நாடாளுமன்றப் பேச்சில் குறிப்பிட்டிருக்கிறார் கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சார்ட் பத்திரானா.

அமைச்சர் பத்திரானா தாம் பதவியேற்ற பின்னர் ஒருபோதும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ததில்லை. எதிர்க்கட்சித் தரப்பில் இருந்தபோதும் யாழ்ப்பாணம் வந்ததில்லை.

ஆகையால், போருக்கு முன்னரும், போருக்குப் பின்னரும் யாழ்ப்பாணத்துக் கல்வி நிலையை ஒப்பிடக் கூடியதான நேரடி அறிவு அவருக்கு இல்லை. நிச்சயமாக இரண்டாம் அல்லது மூன்றாம் பேர் வழி ஊடாகச் சென்ற தகவல்களை மனதில் வைத்தே அமைச்சர் இவ்வாறு கூறியிருக்கவேண்டும்.

உத்தியோக ரீதியாகத் திரட்டி அனுப்பப்பட்ட புள்ளிவிவரங்களின் அடிப்படையில் அமைச்சர் இவ்வாறு கூறியிருப்பாராயின் சம்பந்தப்பட்ட அறிக்கைகள் உண்மைக்குப் புறம்பானவையாக, அமைச்சரை தவறாக வழி நடத்துவனவாக தயாரிக்கப்பட்டிருக்கவேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மாணவர்கள் பரீட்சைகளில் இன்னமும் சிறந்த பெறுபேறுகளை எய்துகிறார்கள் என்பதனை வைத்துக் கொண்டு மேற்படி கருத்தை அமைச்சர் கூறியிருப்பின் அது எழுந்தமானமான மதிப்பீடாகும்.

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போதும், யாழ்ப்பாண மாணவரின் நிலை சற்று உயர்வாக இருக்கலாம். அது வேறு. மூல வளம் இல்லாவிடினும் தமது மூளைவளத்தினாலேயே யாழ்ப்பாண மாணவர் திறமையைக் காட்டியுள்ளனர்.

ஆனால் போரினால் யாழ்ப்பாணத்தின் கல்வி பாதிக்கப்படவில்லை என்பது உண்மை நிலைக்கு நேர்மாறானதாகும்; முழுக்க முழுக்க முரணானதாகும்.

போரினால் யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகள் பல இடிந்தகட்டடங்களுடன் இயங்குகின்றன; உடைந்த தளபாடங்களே மிஞ்சியுள்ளன. கல்விப் போதனைக்குரிய அடிப்படைத் தேவைகள் இல்லாத பாடசாலைகளே அனேகம்.

போதிய ஆசிரியர்கள் இல்லாமை, ஆய்வு கூடங்களுக்குரிய பொருள்கள், உபகரணங்கள் அறவே இல்லாமை, துணை நூல்கள் மற்றும் மூலவளங்கள் இல்லாமை யாழ்ப்பாணப் பாடசாலைகளைப் பீடித்த பெரும் நோயாகியுள்ளன.

முன்னர் சிறப்பாக இயங்கிய பாடசாலைகள் இப்போது வளங்கள் குறைந்த நிலையில் பின் தள்ளப்பட்டுள்ளன. முன்னர் பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது; இப்போது பல மடங்கு வீழ்ச்சி கண்டுள்ளது.

மொத்தத்தில் கல்விக்கான சூழ்நிலை நிறைவாக இன்னும் இங்கு உருவாகவில்லை, இத்தகைய நிலையில் —

யாழ்ப்பாணத்துக் கல்வி பாதிக்கப்படவில்லை என்ற மனப் பதிவுடன் கல்வி அமைச்சர் செயலாற்றக்கூடாது. யாழ். பாடசாலைகளைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு வேண்டிய உதவிகளை வழங்க வேண்டும்; தேவைப்படும் நிதியையும் ஒதுக்க வேண்டும்; வளங்களைப் பெருக்க வேண்டும். இதில் விசேட கவனமும் உள்ளார்ந்த விருப்பமும் தேவை. அமைச்சரிடம் எதிர்பார்க்கலாமா?

# சுழிபுரம், மூளாய்ப் பகுதிகளில் முகமூடித்திருடர் கைவரிசை!

### இராணுவம் வந்திருப்பதாகக் கூறி வீட்டைத் திறக்க வைத்தனர்

அராலி, டிச. 7

சுழிபுரம் மூளாய்ப் பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

சுழிபுரம் மத்தியைச் சேர்ந்த குணரட்ணம் சங்கரப்பிள்ளை என்பவரின் வீட்டில் கதவுகளைத் தட்டிய சிலர் ''நாம் இராணுவத்தினர். கதவைத் திறவுங்கள். சோதனையிட வேண்டும்'' எனக் கூறினராம்.

பயத்துடன் வீட்டின் கதவைத் திறந்ததும் உள்ளே நுழைந்த முகமூடித் திருடர்கள் 10 ஆயிரம் ரூபா பணம், 9 பவுண் நகை என்பவற்றை அபகரித்துச் சென்றனர்.

மற்றொரு சம்பவத்தில் சபாபதிப்பிள்ளை இராசபல்லவன் என்பவரின் வீட்டுக் கதவைத் தட்டிய சிலர் இயக்கம் ஒன்றின் பெயரைச் சொல்லி கதவைத் திறவுங்கள் என உத்தரவிட்டனர். கதவைத் திறந்ததும் உள்ளே நுழைந்து 15 பவுண் நகைகளை அபகரித்துச் சென்றனர்.

அதே சமயம் பலசரக்குக் கடை ஒன்று உடைக்கப்பட்டு 75 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

சுழிபுரம் மேற்கில் உள்ள கடை ஒன்றை உடைக்க முற்பட்டபோது அயலவர்கள் சத்தமிட்டனர். திருடர்கள் தப்பிஓடி விட்டனர். அவர்களின் முகமூடிகள் இரண்டு கண்டுபிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-12-9)

## வன்னி ஷெல் தாக்குதலில் தெல்லிப்பளை வாசிகள் காயம்!!

வவுனியா, டிச. 7

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் கடந்த புதன்கிழமை காலையில் இருந்து கண்டி வீதிக்கு மேற்குப் பக்கமாக சரமாரியாக ஷெல்தாக்குதலை மேற்கொண்டிருப்பதாகப் ''புலிகளின் குரல்'' தெரிவித்தது,

தெல்லிப்பழையில் இருந்து இடம்பெயர்ந்து அங்கு வாழ்ந்து வந்த யோகரத்தினம் கனகம்மா (வயது 45), சுப்பிரமணியம் சுசிந்தன் (வயது 7) ஆகியோர் காயமடைந்தனர்.

இத்தாக்குதலைதொடர்ந்து மூன்று முறிப்பு, 4 ஆம் கட்டை, லன்னிவிளாங்குளம் ஆகிய பகுதியில் இருந்த மக்கள் இடம்பெயர்ந்து யோகபுரம் மத்திய மகா வித்தியாலயத்தில் தஞ்சம் அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-164-3)

## நிவாரண உணவு முத்திரை

நவாலி, டிச. 7

யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் நிவாரண உணவுமுத்திரைகள் கொழும்பிலிருந்து யாழ் செயலகத்துக்கு வந்து சேர்ந்தன.

இவற்றை பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கையை யாழ். புனர்வாழ்வுப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். (இ-100)

## ஈச்சமோட்டைப் பகுதியில் மேலும் திருட்டுச் சம்பவங்கள்

ஈச்சமோட்டைப் பகுதியில் இரவு நேரங்களில் திருட்டுச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு ஈச்சமோட்டை வீதியில் மறவன் குளத்திற்கு அருகில் உள்ள வீட்டிற்குள் ஓடு பிரித்து திருடர்கள் புகுந்து நகைகள் மற்றும் பணம் என்பவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

அன்றிரவு ஈச்சமோட்டை கடற்கரை வீதியிலும் வீடு ஒன்றினுள் புகுந்து பெறுமதிமிக்க பொருள்களை திருடர்கள் சூறையாடியுள்ளனர்.

கடந்த வாரமும் இப்பகுதியில் உள்ள நான்கு வீடுகளில் திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டியிருந்தனர். (ஐ-17)

## படையினர் கசிப்பு வேட்டை

வட்டுக்கோட்டை, டிச. 7

அராலிப் பகுதியில் கசிப்பு விற்பனை செய்வோர், கசிப்பு அருந்துவோர் ஆகியோருக்கு எதிராக அராலியிலும் வட்டுக்கோட்டையிலும் நிலை கொண்டுள்ள படையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

கடந்த 30 ஆம் திகதி அராலி மேற்கு கோட்டைக் காடு கிராமத்தில் சோதனை நடத்திய படையினர் சகோதரர்கள் இருவரின் பலசரக்குக் கடைகளில் விற்பனைக்காகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெருமளவு கசிப்பைக் கைப்பற்றி அழித்தனர்.

அராலி கிழக்குப் பகுதியில் உள்ள இரு கசிப்பு விற்பனை நிலையங்களை முற்றுகையிட்ட படையினர் விற்பனையாளர்கள் மற்றும் பாவனையாளர்களைக் கைது செய்து கூட்டிச்சென்று பின்னர் எச்சரித்து விடுதலை செய்தனர். (இ-12)

## தொழில்நுட்ப அலுவலர்கள் பதவி உயர்வில் புறக்கணிப்பு

சாவகச்சேரி, டிச. 7

வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் திணைக்களங்களில் பணி புரியும் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் இப்பதவி உயர்வில் யாழ். கல்வித்திணைக்கள பாடசாலை/வேலைப் பகுதி தொழில்நுட்ப அலுவலர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக ஊழியர்கள் சார்பில் தெரிவிக்கப்படுகிறது.

இவ் விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்ட கல்வித் திணைக்கள தொழில்நுட்ப அலுவலர்கள் தமது திணைக்கள தலைவர்களுக்கு தெரியப்படுத்தியும் இவ்விடயம் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும்— இதனால் கல்வித்திணைக்கள தொழில்நுட்ப அலுவலர்கள் அதிருப்தி அடைந்துள்ளார்கள் என்றும் தெரியவந்தது.

### கடந்த 10 மாதகாலத்தில்

## 13 ஆயிரத்து 712 பேர் அ. அட்டைக்கு விண்ணப்பம்

நவாலி, டிச. 7

யாழ். மாவட்டத்திலிருந்து தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு இவ்வருடம் ஜனவரி முதல் ஒக்ரோபர் மாதம் வரை 13 ஆயிரத்து 712 பேர் விண்ணப்பம் செய்துள்ளனர்.

இந்தக் காலப் பகுதிக்குள் 18 ஆயிரத்து 978 பேரின் அடையாள அட்டைகள் கொழும்பிலிருந்து யாழ். ஆட்பதிவுத் திணைக்களப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் கடந்த வருடம் விண்ணப்பம்செய்தவர்களின் அடையாள அட்டைகளும் அடங்குவதாக ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-100)

### இப்போதைய திருவருகைக்காலத்தில்

# அன்பு, உண்மை, நீதியினால் உள்ளங்களில் குடில் அமைப்போம்

இஸ்ராயேல் மக்கள் ஏறக்குறைய 70 வருடங்கள் (கி. மு. 604 – 537) பபிலோனியாவில் அடிமைகளாக இருந்தார்கள். இந்த அடிமை வாழ்வு முடிவுறும் வேளையில் இறைவன் ஏசாயா இறைவாக்கினர் மூலம் இஸ்ராயேல் மக்களுக்கு ஆறுதலும், தேறுதலும் கொடுக்கின்றார். பாவங்களுக்காக அவர்கள் துன்பப்பட்ட போதும் இறைவன் அவர்களை மன்னித்து விட்டார் என்று கூறுகின்றார் கிறிஸ்துவின் திருவாக்கு நம்மைத் தயார்ப்படுத்தும். நாம் 'பாவ' அடிமைத்தன வீட்டிலிருந்து புறப்படவேண்டிய காலமாகும்.

பாவம் நிறைந்த பாழ் வெளியான நம் இதயங்களைப்புனித வாழ்க்கையால் செம்மைப்படுத்துவோம். மலை, குன்றுகள், பள்ளத்தாக்குகளான ஒழுங்கற்றநமது நடத்தையைச் சீர்ப்படுத்துவோம். கோணலானதும், கரடுமுரடானதுமான நமது எண்ணங்கள், சொற்கள் செயல்களை நல்வழிப்படுத்துவோம். இவ்வாறுதிருவருகைக் காலமானது இறைவன்பால் மனமாற்றம் கொள்ளும் காலமாக அமைதல் இன்றியமையாதது.

மேலும் முக்கியமாக இன்

திருவருகைக் காலமானது ஒளி பிறந்து வழி திறக்காதோ; இருள் மறைந்து அருள் சுரக்காதோ; அடிமை வாழ்வு மறைந்து உரிமை வாழ்வு கிடைக்காதோ என்று இன்று ஏங்கும் மக்களுக்கெல்லாம் மீட்பின் நம்பிக்கை தரும் காலமாகும்.

எத்தனையோ ஏழை மக்களின் நலிவுற்ற வாழ்வினைப் புதுப்பொலிவாய் மாற்றிடவும், தொல்லைகள் நிறைந்த இப்பாரினிலே நன்மைகள் புரிந்திடவும், மண்ணிலே

### ஞாயிறு நற்பிரசாதம்

மாந்தருக்குச் சுதந்திர வாழ்வு கொடுத்திடவும் விடுதலைக் கீதங்கள் முழங்கிய காலம் திருவருகைக் காலம்.

வல்லவன் தந்த அருட்கொடையாம் இயேசு, இந்த வையகம் மலர்ந்திட, பேரொளியாய், பெருமகனாய், மாபரனாய், அன்பு நாயகனாய் இம்மண்ணில் உதிக்கும் நாளினைச் சங்க இலக்கியங்களில் தலைவி, தலைவனின் வருகைக்காக உண்ணாமலும், உறங்காமலும் வழிமேல் விழிவைத்துக் காத்திருப்பதுபோல நாமும் தலைவனின் வருகைக்காக நம்பிக்கையோடு காத்திருக்கும்இனிய காலந்தான் திருவருகைக் காலம்.

எல்லாவற்றுக்கும் மேலாக நாம் தயார் செய்த உள்ளக் கோயிலினிலே இயேசு பாலன் தங்குவார். நமது எல்லாப் பாவங்களினின்றும் நம்மை மீட்பார். நம் மனதை மாற்றி அன்பால் ஈர்த்துக் கொள்வார் என்னும் தீர்க்கமான நம்பிக்கை ஒளி நம்மில் ஏற்படுவதும் இக்காலத்தில்தான். எனவே ஆண்டவர் தம் பாதையிலே பீடு நடைபோட, முன் நோக்கிச் செல்ல, அப்பாதையைச் செம்மைப்படுத்துவோம்.

திருவருகைக்காலம் உள்ளத்தில் குடிலமைக்க உகந்த காலம். இறை இயேசுவின் உயர் மதிப்பீடுகளாகிய அன்பு, உண்மை, நீதி, ஏழ்மை, இரக்கம் போன்றவைகளால் நம் உள்ளங்களில் குடில் அமைப்போம்.

போர் அனர்த்தங்களினால் பற்பலவிதங்களில் தாக்கப்பட்டு மனங்களெல்லாம் வனங்களாக்கப்பட்டவர்களின் மத்தியில் நம்பிக்கையூட்டும் நட்சத்திரங்களாக மாற்றப்படுவதற்கு எம்மை இத்திருவருகைக்காலத்தில் தயார் செய்வோம். ★

எஸ். அந்தோனிப்பிள்ளை

## குருநகர் இறங்குதுறை வந்தனர்

கொழும்பு, டிச. 7

வன்னிப் பகுதியிலிருந்து 67 பேர் நேற்று முன்தினம் குருநகர் இறங்குதுறைக்கு வந்து சேர்ந்தனர்.

இவர்கள் அனைவரும் சீனோர் முகாமில் தற்போது தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தொடர்பான விசாரணைகள் முடிவடைந்ததும் இவர்கள் தத்தமது பகுதிகளுக்கு துடியமா அனுப்பி வைக்கப்படுவார்கள். (இ-9)

## நாளை

**கார்த்திகை 23**

திங்கட்கிழமை

திதி: நவமி

முன் இரவு 7-40 வரை.

நட்சத்திரம்: உத்தரட்டாதி

வைகறை 5.58 வரை.

பூரட்டாதி

முற்பகல் 7.34 வரை.

சுபநேரம்: 12 17-1.47

ராகுகாலம்: 7 47 9 17

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 பட்டதாரிப் பயிலுநர்களுக்கு சமுர்த்தி நியமனம் வழங்க கோரிக்கை

வடமராட்சி, டிச. 7

யாழ். குடாநாட்டிலுள்ள பிரதேச செயலகங்களில் பட்டதாரிப் பயிலுநர்களாகக் கடமையாற்றிவரும் 20பேரை யும் சமுர்த்தி முகாமையாளர்களாக நியமிக்குமாறு ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் பட்டதாரிப் பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டபோது இந்த 20 பேரும் புறக்கணிக்கப்பட்டதாகவும் மூன்றாண்டுகளாகியும் இன்னமும் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை எனவும் இவர்கள் விடுத்துள்ள கோரிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இனிமேல் குடாநாட்டில் சமுர்த்தி முகாமையாளர்களை நியமிக்கும்போது வெளிமாவட்டங்களில் நியமிக்கப்பட்டது போல பட்டதாரிப் பயிலுநர்களுக்கு சமுர்த்தி முகாமையாளர் தெரிவில் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சியில் சமுர்த்தி முகாமையாளர்கள் நியமிக்கப்பட்டபோது பட்டதாரிப் பயிலுநர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ஐ-173)


## யா/புனித றோக் றே. க. வித்தியாலயம் ஒளிவிழாவும் ஆங்கில தினமும்

இடம்: யா/புனித றோக் றே.க. வித்தியாலயம்
காலம்: 1997 - 12 - 08 திங்கட்கிழமை
நேரம்: முற்பகல் 11.00 மணி
தலைவர்: திரு. ரி. எஸ் பாலசுந்தரம் (அதிபர், இ. அ. சே III)
பிரதம விருந்தினர்: திரு. டீ. ஆர். அருமைநாயகம்
உதவிக்கல்விப் பணிப்பாளர்- ஆங்கிலம்
திருமதி அருமைநாயகம்
சிறப்புவிருந்தினர்: அருட்தந்தை, ஏ.சீ. கிறிஸ்தோப்பர்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்,
யா/புனித றோக் றோ.க.
வித்தியாலயம்.

(சி-2283)



யாழ் - நகரில் கல்வியில் புதிய உதயம்!

## THE ELITE INSTITUTE

192, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
(புஸ்பா ஸ்ரோர்ஸ் முன்பாக)

1998 கல்வி ஆண்டுக்கான
புதிய பிரிவுகள்
ஆண்டுகள் 6, 7, 8, 9, 10, O/L


கணிதம் — திரு. T. அற்புதராஜா
விஞ்ஞானம் — திரு. K. பாலமுருகன்.
தமிழ் — திரு. B. பாலா; திரு. சந்திரன்
ஆங்கிலம் — திரு. S. பசுபதி
வரலாறும் சமூகக்கல்வியும் — திரு. V. பிறேம்குமார்
வர்த்தகம் — திரு. K. கணகேஸ்வரன்; திரு. T. தர்மகுலசிங்கம்

ஆரம்பம்; 10-12 97 புதன் பி. ப. 3-00 மணி

(51614) — நிர்வாகி


## 45-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு: 14 — 07 — 1935



உதிர்வு: 23 — 10 — 1997

அமரர் நாகமணி இரத்தினவேல் F.C.M.A.

(இளைப்பாறிய கணக்காளர், மீன்பிடி அமைச்சு, பொலீஸ் திணைக்களம், நிதி உதவியாளர் யாழ். பல்கலைக்கழக விவசாயபீடம்)

எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆன்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டும் கடிதம் மூலமும், நேரில் வந்தும், அனுதாபச் செய்திகளைப் பிரசுரித்தும் எமது துயரில் பங்கேற்ற உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமுவந்த நன்றிகள்.

மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரி, மைத்துனர்கள், மைத்துனிகள், மருமக்கள்.

ஏழாலை மேற்கு, ஏழாலை.
110/2, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

[சி/2281]

## வாரம் ஒருவலம் நிகழ்ச்சி

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் தேசிய சேவையில் இன்று காலை மணி 7.10 க்கு இடம்பெறும் 'வாரம்ஒருவலம்' நிகழ்ச்சியில் தபால் தொலைத் தொடர்புகள், வெகுஜனத் தொடர்புத் துறையுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் இடம்பெற உள்ளன.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சின் செயலாளர் கே. சி. லோகேஸ்வரன் கலந்துகொள்வார். அமைச்சர் மங்களசமரவீரவும் நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பத்திரிகைத் துறை, எலக்ரோனிக் தொடர்புச்சாதனங்கள் என்பவற்றின் முக்கியஸ்தர்களும் அரச அதிபர்களும் மற்றும் உயர் அதிகாரிகளும் இந்த நிகழ்ச்சியுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

## படையினர்-புலி.

(முதலாம் பக்கத் தொடர்)

மன்னகுளம் சண்டையில் தமது தரப்பில் மொத்தம் 37 போராளிகள் களப்பலியானதாக புலிகள் அறிவித்துள்ளனர். 37 பேரின் பெயர்களையும் நேற்று அவர்கள் வெளியிட்டனர்.

படையினர் தரப்பில் 300 பேர் இறந்ததாகவும் 600க்கு மேற்பட்டோர் காயம் அடைந்ததாகவும் புலிகள் விடுத்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் புலிகள் தரப்பில் 300 பேர் இறந்ததாக அரசு நேற்று அறிவித்தது.

அர தரப்பில் 36 படையினர் இறந்ததாகவும் —

111 படையினர் இறந்ததாகரோய்டர் தெரிவிப்பதாகவும் மேலும் அரச தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

மன்னகுளம் தாக்குதல் உயிர்ச் சேதம் குறித்து அரசிடம் இருந்து இன்னும் உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை.

(இ-8-9-164-21)

## படையினர்..

(முதலாம் பக்கத் தொடர்)

செஞ்சிலுவை சர்வதேசக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் பாதுகாப்புத் தரப்பு தெரிவித்தது (இ-21)

## புலிகள்...

(முதலாம் பக்கத்தொடர்)

குண்டுகள் — 123
கிரனைமோர் — 19
ரவைகள் — 41 ஆயிரத்து 40 ... புலிகளால் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-21-164)

# தனித்திருந்த பெண்களை மிரட்டி நகை, பணம் அபகரிப்பு!

## சாவகச்சேரி பகுதியில் சம்பவம்

தென்மராட்சி, டிச. 7

வீட்டில் இருந்த பெண்களை கத்திமுனையில் தடுத்துவைத்து அவர்கள் அணிந்திருந்த நகைகள், அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த நகைகள், பெறுமதிமிக்க பொருள்கள் ஆகியவற்றை திருடர்கள் அபகரித்துச் சென்ற சம்பவம் கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி வனுவில் வீதியில் இடம்பெற்றது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

இரவு 7.00 மணியளவில் நாய்கள் குரைத்ததால் கதவை மூடிவிட்டு வீட்டினுள் தாயும் மகளும் இருந்தனர்.

இரவு 7.45 மணி அளவில் பின் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. தாயார் கதவைத் திறந்த போது திடீரென வீட்டினுள் புகுந்த நால்வர் எரிந்து கொண்டிருந்த மின் விளக்குகளை அணைத்து பல்புகளைக் கழற்றிக் கொண்டனர்.

இருவரையும் அறை மூலை ஒன்றில் இருக்க வைத்து கத்தி முனையில் ஒருவர் காவல் நின்றார். ஏனையோர் அறைகளுக்குள் புகுந்து பொருள்களையும் நகைகளையும் எடுத்தனர்.

பின்னர் இப்பெண்களைத் தாக்கி நகைகள் இருக்கும் இடங்களைக் கேட்டு மிகுதி நகைகளையும் எடுத்த பின்னர் அவர்கள் இருவரும் அணிந்திருந்த நகைகளையும் பறித்து எடுத்தனர்.

இரவு 10.00 மணி வரை வீட்டில் நின்ற திருடர்கள் சமையலறைக்குள் போத்தல்களில் வைக்கப்பட்டிருந்த பொருள்களை நிலத்தில் கொட்டிப் பார்த்தனர். அடுப்பையும் உடைத்துக் கிளறிப் பார்த்தனர்.

சத்தம் போட வேண்டாம் என எச்சரித்ததுடன் சத்தமிட்டால் கொலை செய்துவிடுவோமென அவர்களைப் பயமுறுத்தியும் சென்றனர்.

இத் திருட்டுத் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-117)

# கையெழுத்து சஞ்சிகை போட்டி முடிவுகள்

தென்மராட்சி, டிச. 7

பளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட கோட்டமட்ட கையெழுத்து சஞ்சிகைப் போட்டிகளின் முடிவுகள் கோட்டக்கல்வி அலுவலர் அ. கைலாயபிள்ளையினால் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

போட்டி முடிவுகள் வருமாறு:-

**ஆண்டு 3, 4**
**பாலர் கீழ்ப்பிரிவு**

1ஆம் இடம் — பளை மத்திய கல்லூரி, 2ஆம் இடம்— வேம்போடுகேணி சீ.சீ.த.க. பாடசாலை, 3ஆம் இடம்— முகாவில் அ. த. க. பாடசாலை.

**ஆண்டு 5 பாலர் மேற்பிரிவு**

1ஆம் இடம்—பளை றோ. க. த. க. பாடசாலை, 2ஆம் இடம் — பளை மத்திய கல்லூரி, 3ஆம் இடம் — வேம்போடுகேணி சீ. சீ. த. க. பாடசாலை.

**ஆண்டு 6, 7**
**இடைநிலைப் பிரிவு I**

1ஆம் இடம் — வேம்போடுகேணி சீ. சீ. த. க. பாடசாலை, 2ஆம் இடம் — மாசார் அ. த. க. பாடசாலை, 3ஆம் இடம் — தர்மக்கேணி அ. த. க. பாடசாலை.

**ஆண்டு 8, 9**
**இடைநிலைப் பிரிவு II**

1 ஆம் இடம் — பளை மத்திய கல்லூரி, 2ஆம் இடம்— மாசார் அ. த. க. பாடசாலை, 3ஆம் இடம்—தர்மகேணி அ. த. க. பாடசாலை.

**ஆண்டு 10, 11**
**இடைநிலைப் பிரிவு**

1ஆம் இடம் — பளை மத்திய கல்லூரி, 2ஆம் இடம்— மாசார் அ. த. க. பாடசாலை, 3 ஆம் இடம்—வேம்போடுகேணி சீ. சீ. த. க பாடசாலை.

**ஆண்டு 12, 13**
**கல்லூரி நிலைப்பிரிவு**

1 ஆம் இடம் — பளை மத்திய கல்லூரி. (இ-117)

## வாசுதேவ..

(முதலாம் பக்கத் தொடர்)

கலந்துகொள்ள உள்ளன.

நாடு தழுவிய ரீதியில் தமிழ் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். தொடர்ந்தும் காணாமல் போகும் சம்பவங்கள் இந்நாட்டில் இருந்து ஒழிக்கப்படல் வேண்டும், கைது செய்யப்பட்டோர், காணாமல் போனவர்களின் தகவல்கள் உடனே வெளியிடப்பட வேண்டும், கண்மூடித்தனமான கைதுகள், சித்திரவதைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அரச நிர்வாகத்தில் புதிது புதிதாக அறிமுகப்படுத்தப்படும் அடக்குமுறை நடவடிக்கைகள் நீக்கப்பட வேண்டும். தமிழ்மக்கள் சுதந்திரமாக நடமாடக்கூடிய சூழல் ஏற்பட வேண்டும், ஒட்டுமொத்தமாக தமிழ்ச் சமூகம் தண்டிக்கப் படுவதை உடன் நிறுத்த வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன் வைத்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட உள்ளது. (இ-9)

## ஜி. சீ. ஈ. பரீட்சை வினாத்தாள்கள் வந்தன

எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான ஒரு தொகுதி வினாத்தாள் நேற்று முன்தினம் விமானம் மூலம் யாழ். எடுத்து வரப்பட்டன.

முதல் ஆறு நாள்களுக்குரிய வினாத்தாள்களே இவ்வாறு வந்து சேர்ந்துள்ளதாக யாழ் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

## நாவலர் விழா

யாழ்ப்பாணம், டிச. 7

உடுவில் இந்து இளைஞர் மன்றம் ஒழுங்கு செய்துள்ள நாவலர் விழா நாளை திங்கட்கிழமை 1.30 மணிக்கு இராமநாதன் கல்லூரி முகப்பு மண்டபத்தில் நடைபெற உள்ளது.

மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெற உள்ள இவ் விழாவில் —

பிரதம விருந்தினராக உடுவில் கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தனும், கௌரவ விருந்தினராக சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும், சிறப்பு விருந்தினராக 'சங்கீதரத்னம்' திருமதி ஞானகுமாரி சிவநேசனும் கலந்துகொள்ள உள்ளனர்.

இவ்விழாவில் பல கலை நிகழ்வுகளும் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெற உள்ளன.

'நாவலரும் நாமும்' என்ற தலைப்பில் சைவப் புலவர் சு. செல்லத்துரை சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். கண் சத்திர சிகிச்சை செய்தோருக்கு ''உதயன்'' பத்திரிகை ஆதரவில் இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படும். (இ-8-9)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அலுவலகத்தில் 07-12-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org